1-6-1952 M.V.M BANGALORE, 2


# போர்வாள்

வாள் 5 வீச்சு 35

31-5-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

இரா. இளஞ்செழியன் B A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


சென்னையில் ஒரு காட்சி!

## மளிகை கடையில் ராஜாஜி!

[சென்னையில் ஒரு கடைவீதி. அதில் ஒரு மளிகைக் கடை. முகப்பில் சுராஜ்யா ஸ்டோர்ஸ் என்ற பலகை தொங்குகிறது. கடைமீது ஒரு மூவர்ணக்கொடி கம்பீரமாகப் பறக்கிறது. உரிமையாளர் உலகநாத செட்டியார் கடையில் உட்கார்ந்திருக்கிறார். அவர் எதிரில், கடைப் பையன் கந்தசாமி கையைக் கட்டியபடி நின்றுகொண்டிருக்கிறான்.]

உலகநாத செட்டியார்:— டே தடியா! ஏண்டா இப்படி ராந்தல் கம்பம் மாதிரி நின்றுகொண்டிருக்கிறே! அப்படி இப்படி பாருடா! யாராச்சும் பருப்பு கிருப்பு வாங்க வராங்களான்னு பாரு!

[கந்தசாமி வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, மீண்டும் திரும்பி வந்து]

"யாரும் இல்லீங்க எஜமான்! நம்ம அய்யர்தான் வாராரு!"

"அது யாருடா அது நம்ம அய்யரு?"

"அதாங்க! தெனம் சாயங்காலம் சாயங்காலம் வருவாருங்களே! பலம்மா, தாட்டியா, பெரிய உருவம்மா, பெரிசா நாமம் போட்டுக்கிட்டு......அவருதாங்க......"

"என்னடா உளர்றே. அய்யருங்கறே! பெரிசா நாமம் போட்டுகிட்டு இருப்பாருன்னு வேற சொல்றே! ஏண்டா மடையா! அய்யரு எங்காச்சும் நாமம் போட்டுகிட்டு இருப்பாரோடா?"

"அடடே! மறந்துட்டேன், எஜமான்! அய்யரு இல்லே அவரு! அய்யங்காரு எஜமான். அவர் பேர்கூட என்னமோ ராஜான்னு இருக்குங்க!

[மறுபடியும் எட்டிப் பார்த்து விட்டு]

"இதோ அவரே வந்துட்டாருங்க"

[வக்கீல் வரதராஜ அய்யங்கார் கடைக்குள் நுழைகிறார். செட்டியாரின் முகமெல்லாம் பல்லாகிறது]

உலகநாத செட்டியார்: வாங்கோ வாங்கோ, சுவாமிகான், இப்படி வாங்கோ. இதோ இப்படி உட்காருங்கோ.

வரதராஜ அய்யங்கார்: என்ன ஓய் ஒரே கலாட்டா பண்றீர்! நான் என்ன புது மனுஷனா? முன்னே பின்னே வராதவனா? நான் இதோ இப்படி உட்கார்றேன்! நீர் உம்ம வியாபாரத்தைப் பாரும்!

[என்று சொல்லிக்கொண்டே ஒரு மிளகாய் மூட்டைமீது உட்காருகிறார். உடனே.]

உலகநாத செட்டியார்:- அடடே, அது மிளகா மூட்டை ஸ்வாமி! இதோ இந்த நாற்காலியில் உட்காருங்க. ஆமாங்! எப்படி இருக்கு உங்க தொழில்?

வரத:— என்னமோ பகவான் கிருபையிலே நன்னா நடக்கு ஓய்! அதுவும் இப்ப நம்ம ராஜாஜியே பிரதம மந்திரியா வந்திருக்கார். கேக்கணுமா தொழிலுக்கு? சர்க்கரைப் பந்தலிலே தேன் மாரிபொழிஞ்சமாதிரிதான்! ஆமாம்! உம்ம தொழில் எப்படி இருக்கு ஓய்?"

உலக: என் தொழிலா? அதை வெளியே சொன்னா வெக்கக்கேடு சாமி! காலையிலேருந்து ஈ ஓட்டிக் கிட்டிருக்கேன். மணி பதினொண்ணாகுது. இதுவரைக்கும் ஒரு காக்காய் குருவிகூட கடையை எட்டிப் பாக்கலை.

வரத: அப்படியா சங்கதி? எனக்குத் தெரியவே தெரியாதே! வியாபாரம் மந்தமாவா இருக்கு ஓய்?

உலக: மந்தமாவா என்று மெதுவாகக் கேட்கிறீரே சாமி! பொழுது வெடிஞ்சி இக்கேரம் மட்டும் இன்னும் ஒரு ஒத்தைக் காலணா கூட பொரளலையே சாமி? சுராஜ்யா ஸ்டோர்ஸ்ன்னுதான் பேர்போட்டிருக்கேன். காங்கிரஸ் கொடி கூடத்தான் கட்டியிருக்கேன். கட்டி? தம்பிடியாச்சும் பண்டம் வித்ததானே?

வரத: கவலைப்படாதேயும். நன்னா விக்கும். ரெண்டு நாள் போகட்டும். அப்புறம் பாரும். பணம் பணமா வாரிக் கொட்ட மாட்டேரா? ராஜாஜி வந்திருக்கார். உங்களுக்கெல்லாம் சகாயம் பண்ணாமலா போவார்?

(16-ம் பக்கம் பார்க்க)

[சிறுகதை]

# தப்பிவிட்டாள்!

[தில்லை — மறைமுதல்வன்]

[............வங்க இலக்கிய வானில் ஒளி சிந்தும் முழு நிலவு—இரவீந்திரநாத் தாகூர்! விண்ணுக்கும் மண்ணுக்குமாக விரிந்து நிற்கும் ஆற்றல் படைத்த பெருங் கவிஞர்!........

அவருடைய சிருஷ்டிகள்—இலக்கிய படைப்புகள்—வங்க இலக்கியத்திலே புது அத்தியாயம் சேர்த்துவிட்டன! அதன் பெருமைக்கே அடிகோலி விட்டன!.............

செல்வச் சீமான்களின் புகழ் பாட எழுந்தவை அல்ல அவரது சிருஷ்டிகள். அவையெல்லாம் வங்க நாட்டின் படப்பிடிப்பு! வங்க மக்களின் வாழ்வை பிரதிபலிக்கும் கண்ணாடி! அங்குள்ள அலங்கோலங்களை எடுத்துக்காட்டி, திருத்தும் உணர்ச்சிச் சித்திரங்கள்!

அந்த முறையில் தீட்டப்பட்டது தான் இதுவும்! கணவனின் சந்தேகத்தினால், குருவின் கோணல் நடத்தையினால்..............வாழமுடியாதவளான ஒரு அபாக்கியவதியின் வாழ்க்கையைத்தான் படம் பிடித்தார் "SAVED" என்ற தலைப்பில்! அதுதான் இங்கு சித்தரிக்கப் பட்டிருக்கிறது.........கவர்ச்சிகரமான முறையில்—கருத்துக்கள் சிதையாமல்.........]

கௌரி——

அப்போது தான் மொட்டு விரித்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும் வண்ண மலர்...... வசந்தகாலத் தென்றல்...இன்ப புரியின் இணையற்ற பிரதிநிதி.... அழகுக் கோயிலின் தலைவாயிலிலே நிற்கும் மங்கை...வாலிப உள்ளங்களை வாட்டி வதைக்கும் உருவங் கொண்ட தையல்.... ஓரே வார்த்தையில் வேண்டுமா? அவள் ஒரு அழகுத் தெய்வம்!

அந்த அழகுத் தெய்வத்தை அடைய ஏங்கியவர்கள் பலர்! ஆனால், அதில் வெற்றி யடைந்தது பாரேஷ் தான்! ஆம்; அவன், அவள் கணவன். அதோடு கூட அவன் ஒரு வழக்கறிஞன்! தன்னுடைய முயற்சியினால் அப்போது தான் முன்னுக்கு வந்தான். பணமும் புகழும் அவனிடம் போட்டி போட்டுக் கொண்டு கொஞ்சி விளையாடின. வறுமைச் சாக்கடையில் நெளிந்து கொண்டிருந்த அவன் வாழ்க்கை, இப்போது, வளமான பாதையில் சென்று கொண்டிருந்தது!

கௌரியிடம், அளவிட முடியாத அன்பு கொண்டிருந்தான் பாரேஷ். அவனுடைய எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள், எல்லாமே பெரும்பாலும் அவளைப்பற்றி தான் இருக்கும்! அவளுடைய முகம் சுருங்கினால் இவனால் தாங்கவே முடியாது. அவளுடைய உடல் வாடினால், இவன் உள்ளம் துடி துடித்துப் போகும்! அவளுடைய தேவைகளை பூர்த்தி செய்த பிறகுதான் இவனுக்கு நிம்மதி! அவ்வளவு தூரம், அவன். அவளிடம் அன்பை கொட்டியிருந்தான்! ஆனால்.......?

அவனுடைய சில செய்கைகள் அவனை ஒரு பைத்தியமாக எண்ணத் தூண்டின! ஆம்; திடீரென்று நீதி மன்றத்திலிருந்து ஓடிவந்து விடுவான் வீட்டுக்கு. வந்தவுடன்—சிந்தை கலங்கியவன் தன்னைக் கல்லாலடிப் போரை வெறித்துப் பார்ப்பானே—அது போல பார்ப்பான் கௌரியை! தொடர்பில்லாத கேள்விகளையே கேட்பான்! காரணமில்லாது வேலைக்காரனை நீக்கி விடுவான். எந்த வேலைக்காரன் மீதாவது கௌரி சிறிது அன்பாக பழகினால் போதும், அடுத்த நாள் அவனை அங்கே காணமுடியாது—வேலையாளாக!

இதனாலெல்லாம் பாரேஷ், கௌரிக்கு ஒரு புரியாத புதிராக இருந்தான்! அவனுடைய நடவடிக்கைகள் அவளுக்கு வியப்பையும், அதே நேரத்தில் வெறுப்பையும் தந்தன! ஆனால், அவளுடைய வெறுப்பு அவனுடைய நடவடிக்கைகளை மேலும் விசித்திரமாக—விபரீதமாக—ஆக்கிற்று! நீதி மன்றத்தில் எதிரி ஆட்களை குறுக்குக் கேள்வி கேட்பானே, அதே போல கௌரியிடமும் கேட்பான்.

சில நாட்கள் சென்ற பிறகு தான் கௌரி, கணவனைப்பற்றி புரிந்துகொண்டாள். எதைக் கண்டாலும் சந்தேகப்படும் தன்மையினால் உருவாக்கப் பட்டான் பாரேஷ், என்ற உண்மை அவளுக்கு அப்போது தான் தெரிந்தது! ஆம்; அவன், அவளிடம் தன் உயிரையே வைத்

திருந்தான்! மட்டற்ற அன்பு செலுத்தினான் அவள் மீது. ஆனால்....அவளைப் புரிந்து கொள்ள வில்லை! மாறாக, சந்தேகப் பட்டான்!

இவ்வளவு நாட்களாகியும், தன்னை புரிந்துகொள்ள வில்லையே என்ற எண்ணம்—குற்றமற்ற நடத்தையில் மாசு காணமுற்படுகிறானே என்ற வருத்தம்—இனி எப்போது திருந்தப் போகிறானோ என்ற ஏக்கம்—இவை யாவும், கௌரியை துயரத்தில் மூழ்கடித்தன! அவளுடைய உதட்டில் உலவிக்கொண்டிருந்த புன்னகை புதைந்து போயிற்று! இளம் இதயத்தில் குமிழ் விடும் இன்ப நினைவுகள்...உள்ளத்தில் கொப்பளிக்கும் ஆசை எண்ணங்கள்...உடலில் பரிமளிக்கும் உணர்ச்சிகள்...இவை யாவும் மலர்ந்து மணம் வீசா முன்பே கருகித் தீய்ந்தன! நடமாடும் இயந்திரமாகி விட்டாள் கௌரி!

கடைசியில்.......!

உடைந்துபோன உள்ளத்துக்கு—அமைதி குலைந்த மனத்துக்கு—ஆறுதலைத் தேடி தவித்துக் கொண்டிருந்த இதயத்துக்கு—சாந்தி யளிக்க, கௌரி, பரமானந்தரிடம் சென்று வரலானாள்!

பரமானந்தர்—அவ்வூரிலே உள்ள ஒரு இளம் பாதிரியார்! ஒழுக்கத்தில் சிறந்தவர்; ஆசாபாசங்களை அடக்கியவர்; பரமனின் பாதார விந்தங்களை அடைய துணை புரியும் போதகர்; அன்பினாலும், அகிம்சையினாலும் உருவாக்கப்பட்ட சத்திய சீலர்; வேதங்களை ஓதி ஓதி புனிதமடைந்த சன்மார்க்க வீரர்;.......இப்படித் தான், ஊரார் அவரைப்பற்றி எண்ணினார்கள்! ஆகவே தான் பாரேஷ், கௌரி அவரிடம் சென்று வருவதில் சந்தேகப்பட வில்லை—தடுக்கவுமில்லை!

கௌரி, ஒவ்வொரு நாளும் பரமானந்தர் விடுதிக்குச் செல்வாள். அவர் கீதையை விளக்குவார்! உபநிஷத்தைச் சொல்லுவார்!—நீதி நெறியை போதிப்பார்! கடவுளின் அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் விரித்துரைப்பார்! வாழ்வின் தத்துவங்களைப் பற்றி எடுத்தியம்புவார்!—எல்லாவற்றையும் கேட்டுக் கொள்வாள் கௌரி!

கணவனிடம் கொண்டிருந்த கௌரியின் காதல், அன்பு, எல்லாம் சிதைந்து போனது! அவளுடைய மனம் வழிபாட்டிலே ஈடுபட்டது! குருவின் போதனையைக் கேட்பது—கீதையைப் படிப்பது—கடவுளை நினைப்பது—இப்படி மாறி விட்டாள் கௌரி! வாழ்வில் இன்பங்காண வேண்டிய நாட்களில், துன்பத்தைத்தான் அனுபவிக்க முடிந்தது அவளால்!.....................

* * *

ஒரு நாள்...............

பாரேஷின் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த சந்தேகம், பொறாமை, எல்லாம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தன! குமுறலும் கொந்தளிப்புமாக உள்ள கடல்—மப்பும் மந்தாரமுமாக இருக்கும் வானம்—சுழன்றடிக்கும் சூறாவளி—இப்படி ஆயிற்று அவன் மனம்!

கௌரி, அப்போதுதான் பரமானந்தர் விடுதியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தாள். என்றைக்குமில்லாமல் அன்று பாரேஷ் இருந்த நிலை, அவள் முன் ஆச்சரியக்குறியை நடமாட விட்டது! வியப்பின் ரேகைகள் அவள் நெற்றியைக் கிழித்தன! அச்சத்தின்சாயல் அவள் முகத்தில் படிய ஆரம்பித்தது!

“கௌரி! நில் அப்படியே. நீ அந்த காவியுடைக்காரனை காதலிக்கிறாய்! உண்மையாகச் சொல். நீ அந்த துறவியைக் காதலிக்கிறாயா இல்லையா?”—பாரேஷிடமிருந்து கிளம்பிய இந்த எதிர்பாராத கேள்வி, கௌரியை திக்குமுக்காடச் செய்தது. ஆனால் அடுத்த வினாடி............

படுத்திருந்த அவளுடைய மனப் பாம்பு படமெடுத்தாடியது! புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பியது! அதன் விளைவு..................

“அப்படி நான் காதலித்தால் தான் என்ன.............”

அவளையறியாமலே இந்த வார்த்தைகள் அவள் உதட்டிலிருந்து உருண்டோடி வந்தன! பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது தான் அப்படி கேட்டிருக்கக் கூடாதென்று! அதுவும் சந்தேகப் பிராணியான தன் கணவனிடம்...............கையிலிருந்த ஒரே ஒரு ஈட்டியை பாய்ந்து வந்த வேங்கை மேல் எறிய, அந்த ஈட்டி குறிதவறி எங்கேயோ போய் விழ, அதனால் வேகங்கொண்ட வேங்கை ஈட்டி எறிந்தவனைகோபத்தோடுபார்த்தால்...............எப்படியிருக்கும் அவன் நிலை? அப்படித் தான் இருந்தது கௌரியின் நிலையும்!

ஆனால் இதற்குள், கௌரியின் பதில் பாரேஷை மிருகமாக்கி விட்டது! அவனுக்கு, என்ன செய்கிறோமென்ற உணர்வேயில்லை. கௌரியை இழுத்து ஒரு அறையில் தள்ளி பூட்டினான்—நீதி மன்றத்தை நோக்கி நடையை விரித்தான்!

* * *

பரமானந்தர் தன்னுடைய அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் முன் விரித்து வைக்கப்பட்டிருந்த புத்தகத்தின் ஏடுகள் காற்றில் படபடத்தன! அவருடைய கண்கள்தான் புத்தகத்திலுள்ள வரிகள் மீது

(6-ம் பக்கம் பார்க்க)

# அன்று அவர்!

[நா. நிலத்தலைவன், *B. A. (Hons)*]

"சுதந்திரமான கொள்கையுடைய வர்களும், சர்க்காரின் கொள்கைகளைக் கண்டிப்பவர்களும் வெளிநாடுகளுக்குப் போக முடியாது; அவர்களால் 'பாஸ் போர்ட்' (வழிச்சீட்டு) பெறவோ, பிரயாண வசதிகள் பெறவோ முடியாது..........."

தோழர் அனந்தன் நம்பியார் மாஸ்கோ பொருளாதார மாநாட்டிற்கு ஒரு பிரதிநிதியாகச் செல்ல விரும்பி பாஸ்போர்ட் வேண்டுமென்று கேட்டார்; மகாஜனம் பொருந்திய மந்திரி ஒருவரைத் தோற்கடித்த தோழர் மாஸ்கோ போக, சர்க்கார் சம்மதிக்குமா? பிரயாணச் சீட்டு வழங்க மறுத்தது. அதைக் கண்டு மனம்வெந்து, மற்றொரு மகாஜனத்தைத் தொகுதி விட்டு ஓடி வேறு தொகுதியில் நிற்கச்செய்த, ஏ. கே. கோபாலன் இம்மாதிரிக் கூறியிருப்பார் என்று நினைக்க இடமுண்டு. ஆனால் அவர் இம்மாதிரிக் கூறவில்லை.

இலட்சியக் கொள்கைகளை இலங்கையில் பரப்பிட இயக்க வீரர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன், எழுத்துச் சிற்பி சி. பி. சிற்றரசு ஆகியோர் இலங்கை போகக் கூடாது என்று சமீபத்தில் சென்னை சர்க்கார் தடை செய்ததல்லவா? அது கண்டு உள்ளம் நொந்து அறிஞர் அண்ணாதுரை மேற்கண்டவாறு கூறியிருக்கலாம் என்று நினைக்கவும் இடமுண்டு. ஆனால் அவர் அம்மாதிரிக் கூறவில்லை.

"மாஸ்கோ கூலி"களும், "நாஸ்திகவாதி"களும் கூறவில்லையானால் பின் யார்தான் கூறியது? தேசியவாதிகளின் உள்ளங்களில் எந்தப் பேரைச் சொன்னால் தேன் ஆறு பாயுமோ அந்தத் திருவாளர்—ஆசியாவையே தன் அறிவாற்றலால் அடிமையாக்கிக் கொண்டு மக்கள் குல மாணிக்கம் என்று எந்த மகானுபவர் புகழப்படுகிறாரோ அந்தப் புனிதர்,—முடி சூடா மன்னர் பண்டித ஜவஹர்லால் நேருதான் கூறியிருக்கிறார் இதுபோல! மூர்ச்சித்து விழுந்துவிடவேண்டாம்! உங்கள் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பக் கூட இங்கே அந்த 'வஸ்து' கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆமாம்! அலகாபாத் பண்டிதர், ஆசியாவின் திலகம், இந்தியாவின் தலைவன்—பண்டித நேருதான் கூறியுள்ளார். அவர் கூறியது 1952-ல் அல்ல என்பது மட்டும் நினைவிருக்கட்டும்.

பண்டித நேரு பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது ஓர் அழகான, உன்னதமான நூல் எழுதினார். உலகம் புகழும் அந்த நூலில் தன் உள்ளத்தைத்திறந்து கொட்டி, தன்னைப் போன்ற ஜனநாயகவாதி கிடையாது என்று அழுத்தந்திருத்தமாக எழுதி, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அவதூறான ஆட்சியை, அடக்குமுறைக் கொள்கைகளை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து எறிந்தார். இந்திய சரித்திரகாலத்திற்கு முன்னால் எப்படியிருந்தது என்பதில் ஆரம்பித்து, திராவிடர்கள் ஆரியர்கள் என்ற இனத்தாரின் ஆதி சரித்திரத்தைக் கூறி, அதன் பிறகு மற்ற நாட்டார் படையெடுத்து இந்த நாட்டைப் பாழாக்கினது முதல், பறங்கியன் ஆட்சியில் அகப்பட்டுக்கொண்டு பட்டபாடும், பாரதமாதாவின் புதல்வர்கள் சிறையில் அடைக்கப்பட்டதும் ஆன 1942-ம் ஆண்டு புரட்சி வரையில் விளக்கமாக எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்திற்கு "இந்தியாவின் கண்டுபிடிப்பு" Discovery of India என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதிலேதான் அவர் முதலில் கூறியவாறு ஒரு பாரா எழுதியுள்ளார் ஆங்கிலேய ஆட்சியின் கோனல் கொள்கைகளைக் குறை கூறியவர்களுக்கும், அவர்களின் கொள்கைகளைக் கண்டித்தவர்களுக்கும் மற்ற நாடுகளுக்கும் போக வசதிகளும், வழிச் சீட்டுகளும் தர மறுத்துவிட்டது ஆங்கில அரசாங்கம். அதற்காகப் பண்டித நேரு அந்த சர்க்காரைக் குறை கூறுகிறார். பண்டித நேரு முதன் மந்திரியானால் ஆட்சி எப்படியிருக்கும், எல்லோருக்கும் எல்லா நாடுகளுக்கும் செல்ல பாஸ்போர்ட் கிடைக்கும் என்றுதான் எல்லோரும் நினைத்திருப்பார்கள். ஆனால் இன்று நாம் கண் எதிரில் காண்பதென்ன?

எந்தக்காரணத்திற்காக காங்கிரஸ் தலைவர்கள் வெளிநாடுகளுக்குப் போகக்கூடாது என்று ஆங்கிலேய அரசாங்கம் தடுத்ததோ, அதேகாரணத்திற்காகத்தான் நேரு ஆட்சியும் இதரர்களுக்கு வழிச்சீட்டு தர மறுக்கிறது என்று கூறினால் அதற்கு ஆங்கிலேய அரசாங்கத்தை மட்டும் குறை கூறுவானேன்? நாட்டில் நேரு அமைதி நிலவவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அரசாங்கம் இவர்களுக்கு பாஸ்போர்ட் தர மறுத்துவிட்டதென்றால் அதே காரணத்திற்காகத்தானே பிரிட்டிஷ் அரசாங்கமும் காங்கிரஸ்காரர்களுக்கு பாஸ்போர்ட் தர மறுத்துவிட்டது? தன்னுடைய ஆட்சியை எதிர்ப்பவர்களுக்கும், தன் கட்சிக் கொள்கைகளைக் குறைகூறுபவர்களுக்கும் நேரு அரசாங்கம் அனுமதிச் சீட்டு வழங்க மறுத்துள்ளது; அதேபோலதான் பிரிட்டிஷ் அரசாங்கமும் செய்தது. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி செய்த வேலைச் சுட்டிக் காட்டி அது ஜனநாயகப்படுகொலை என்று பேசிடும் ஜவஹர் தன் செயலுக்கு என்ன சொல்வார்?

அனந்த நம்பியாரும், கருணாநிதியும் சர்க்காரின் கொள்கைகளுக்குச் சாமரம் வீசுபவர்கள் அல்ல என்ற காரணத்திற்காக பிரயாணச் சீட்டு வழங்கப்படவில்லை. ஆனால் அது ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்பட்டது ஆங்கிலேயனோ ஜனநாயகத்தைக் கொலை செய்வதற்காக அனுமதி தர மறுத்தான்; அவரோ ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக அம்மாதிரிச் செய்கிறார்.

நேருவின் அந்த வாசகத்தைப் படித்தவர்கள் நிச்சயம் நேரு பிரதமரானால் நேர்மையாக நடந்துகொண்டு எல்லோருக்கும் அனுமதிச் சீட்டு தர இசைவார் என்ற எண்ணத்தில்தான் அவரது எழுச்சிக் குரலுக்கு இசை பாடினார்கள் ஆனால் அவரோ நான் ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டுத்தான் மறு

காரியம் பார்ப்பேன் என்று சொல்வதுபோல் உங்களுக்கு அனுமதிச் சீட்டு கிடையாது, வால்சந்த் ஹீராசந்துகளுக்கும் விஜயலக்ஷிமிகளுக்கும்தான் உண்டு என்கிறார்.

சிறையில் இருக்கும்போது ஒருமாதிரி பேசுவதும் சிம்மாதனத்தில் இருக்கும்போது இன்னொருமாதிரி நடப்பதும் எல்லோருக்கும் வழக்கமாகிவிட்டது. 'பதவி'யிருக்கிறதே அது அம்மாதிரியான 'மாயவித்தை' புரிகிறது. அந்த வித்தை பண்டிதரிடமும் விளையாடியிருக்கிறது. அது அவரது குற்றமல்ல. குற்றம் திருந்தி சரியான பாதையில் செல்லுமாறு செய்ய வேண்டியது மக்கள் கடமையாகும்.

செயலும் சொல்லும் வேறுபடுவதென்பது பண்டிதரிடம் பழக்கமாகிவிட்ட ஒரு பண்பாகிவிட்டது. ஆயிரம் முறை அவர் அம்மாதிரி நடந்துகொண்டதற்கு உதாரணம் கொடுத்திருக்கிறோம். ஆயிரத்தோராவது உதாரணமிது. வெள்ளைக்காரனை அந்நியன், நியாயமில்லாமல் ஒரு நாட்டை அடக்கி வைத்து, துப்பாக்கியின் துணை கொண்டே துரைத்தனம் நடத்திவந்தான். ஜனநாயகம் சற்று ஓய்வெடுத்துக் கொண்டது. பாஸ்போர்ட்டுகள் வழங்க மறுக்கப்பட்டன. ஆனால் இப்போது நடப்பதோ சுதந்திர அரசாங்கம். வயது வந்த இந்நாட்டு மன்னர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். ஜனநாயகக் கொள்கைகள் பரவி வருகின்றன; இந்த ஆட்சியினர் ஓர் இருவருக்கு மற்றநாடுகளுக்கும் போவதற்கு அனுமதி தருவதால் அமைதிக்குப் பங்கமோ, ஆட்சிக்கு நடுக்கமோ ஏற்பட்டுவிடாது. ஆனாலும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. காரணம் என்ன? அவர்கள் சர்க்காரின் கொள்கைகளை ஆதரிப்பவர்கள் அல்ல; கண்டிப்பவர்கள். அதாவது எந்தக்காரணத்துக்காக வெள்ளைக்காரன் காலத்தில் மக்களின் தலைவர்களுக்கு பாஸ்போர்ட்டுகள் வழங்க மறுக்கப்பட்டதோ, எந்தக் காரணத்தைப் பண்டித நேரு பலமாகக் கண்டித்து, உலகத்தினர் முன் வெள்ளையனின் வெறியாட்டத்தை அம்பலப்படுத்தினரோ, அதேகாரணத்திற்காகத்தான் இன்றும் அனுமதி மறுக்கப்படுகிறது.

உண்மையான ஜனநாயகம் இந்நாட்டில் ஆட்சிபுரிகிறதென்னும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், மற்ற நாடுகளுக்குப் போக அனுமதி கிடைத்திருக்கும் ஆட்லி ஆட்சியின்போது ஈடன் (சர்ச்சிலின் வலதுகரம்) மற்ற நாடுகளுக்குப்போக அனுமதி மறுக்கப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. அதேபோல் சர்ச்சில் ஆளும் இப்போது கேட்ஸ்கிலுக்கு கென்யா போக அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் ரிபப்ளிகன் கட்சி ஆளும்போது டெமாக்ரட் கட்சியினருக்கு அனுமதிமறுக்கப்பட்டதாகவோ, பிரான்ஸில் சோஷலிஸ்ட் தோழர்களுக்கு பிரால் சர்க்கார் அனுமதி மறுத்ததாகவோ நமக்குத் தெரியவில்லை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில்தான் இவர் அங்கே போய்த்திருப்புவது ஆபத்து என்று தெரிந்தால் ஒழிய, அனுமதி மறுக்கப்படாது. பயங்கரவாதிகளான அரசியல் கொள்கையினருக்கும் அராஜகத்தில் அழியாத நம்பிக்கை கொண்டோருக்குத்தான் அனுமதி மறுக்கப்படும் அது நியாயமும்கூட, ஆனால் இந்த நாட்டில் யாருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைக் கூறவும் வேண்டுமா?

அனந்த நம்பியாருக்கும், கருணாநிதிக்கும் அனுமதிகிடைக்காததைப் பற்றிக் கண்டித்து அழுவதற்காக அல்ல இந்தக் கட்டுரை எழுதப்படுவது. ஆனால் நேரு அன்று கூறியதற்கும், இன்று செய்வதற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கவே இக்கட்டுரை வரையப்படுகிறது. சொல்லொன்று செயலொன்றாக மாறியுள்ள அவர் அன்று கூறியதை எடுத்துகாட்டவே இதை எழுதலானேன். அவர் அன்று கூறியதென்ன? மறுபடியும் பாருங்கள்.

> சுதந்திரமான கொள்கையுடையவர்களும், சர்க்காரின் கொள்கைகளைக் கண்டிப்பவர்களும் வெளிநாடுகளுக்குப் போகமுடியாது, அவர்களால் 'பாஸ்போர்ட்' (வழிச்சீட்டு) பெறவோ, பிரயாணவசதிகள் பெறவோ முடியாது.''

["Persons holding independent views or critical of government policy had no chance of going abroad; they could neither get a passport nor transport facilities"

Discovery of India Page 470.]

ஆமாம். அன்றைய நேரு வேறு, இன்றைய நேரு வேறுதான்! அதில் சந்தேகமே கிடையாது. அதற்குச் சான்றுதான் மேலே கூறிய வாசகம்.

---

## இலங்கையில் தி. மு. க. முரசொலி

4-5-52-ல் கிராண்ட்பாஸ் ரோடு 222-ம் எண் இல்லத்தில் தோழர் செவல்மணியின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கிராண்ட்பாஸ் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப் பட்டது. கே. வ. தாகிர் செயலாளர், செவல்மணி உதவிச் செயலாளர், ஏ. எ. ஜப்பர் பொருளாளர், எ. பெரியண்ணன் விளம்பரச் செயலாளராகவும் தோழர்கள் எஸ். மீராசா, பி. எஸ். சாகுல் அமீது, என். சிங்காரம், தேனீர் செல்வன், பேச்சிமுத்து ஆர். தம்பையா, எஸ். அப்பு ஆகிய எழுவர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப் பட்டது. ஈற்றில செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

11-5-52-ல் நடந்த அவசர கூட்டத்தில் கழகத்தின் ஆரம்ப விழாவை முன்வரும் 25-5-52—ல் நடத்துவது, தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயஞ் செய்யும் கழகத் தோழர்களுக்கு தேனீர் விருந்தளிப்பது, இங்கு விஜயஞ் செய்யும் கழகத் தோழர்களைக் கொண்டே 25-5-52 வரை இலங்கையில் இருக்க நேரிட்டால் திறப்பு விழா நடத்துவது, இக்கழகம் தனது எல்லா பொறுப்புகளையும் தலைமைக் கழகத்துடனேயே தொடர்பு வைத்துக் கொள்வது, கையெழுத்து சஞ்சிகையான "உழைப்பாளியை" இக்கழக வெளியீடாக சிறந்த முறையில் வெளியிடுவது என தீர்மானிக்கப்பட்டது.

---


## போர்வாள்

### சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6—8—0 |
| 6 மாதம் | ரூ. 3—4—0 |

போர்வாள் அலுவலகம்

131, பிராட்வே, சென்னை-1.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டமிட்டன வேழுமிய, மனம் கண்ணோடுழைத்துழைக்க மறுத்து விட்டது! அது, கற்பனைக்குதிரை மீதேறி எதையோ நோக்கி தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்தது!

அறையில் ஆட்சி செய்து கொண்டிருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு "கிறீச்" என்ற ஓசையோடு திறந்தது கதவு!

ஏட்டிலே பதித்திருந்த விழிகளை, வாயிலை நோக்கித் திருப்பினார் பரமானந்தர்! அங்கே....... ......கௌரி நின்றுகொண்டிருந்தாள்! கொம்பைச்சுற்றிபடர்ந்த கொடி பெரு மழைக்குப்பின்— கடுமையான புயலுக்குப்பின்— நிலைகுலைந்துபோயிருக்குமே, அப்படித்தான் இருந்தது அவள் நிலையும்!

"யாரது! கௌரியா!........ இந்த நேரத்தில்........."

"ஆம்; நான்தான் சுவாமி! இந்தக் குடும்ப வாழ்வின் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்! மோட்சத்துக்குச் செல்லும் வழியைக் காட்டுங்கள்!"

"பதறாதே குழந்தாய்!...... நிதானமாகக் கூறு......"

"என் கணவர் என்னைப் புரிந்து கொள்ளவேயில்லை! என்னை மிகவும் சந்தேகிக்கிறார்! இன்று அறையிலும் தள்ளி பூட்டிவிட்டார்! அந்த அறையிலிருந்து தப்பி வந்த எனக்கு இந்த உலக பந்தங்களிலிருந்து தப்ப வழி கூறுங்கள்........."

அவளுடைய நிலை இப்போது புரிந்தது பரமானந்தருக்கு.

"கௌரி! உனக்கு அனுபவம் போதாது. குடும்பததில் குழப்பம் ஏற்படுவது சகஜம்! இன்னும் சில நாட்களில் எல்லாம் சரியாகிவிடும். மனதை திடப்படுத்திக் கொண்டு வீட்டுக்குப்போ......"

அவரால் இந்த சமாதானத்தை தான் கூறமுடிந்தது. ஆனால் கௌரியின் உள்ளத்தில் வீசிக் கொண்டிருந்த புயலின் வேகம், இந்த வார்த்தைகளால் ஓரளவு தணிந்தது! அமைதியாக-வருத்தம் கப்பிய முகத்தோடு—வீட்டை நோக்கிச் சென்றாள் கௌரி! ஆனால்...

கௌரி சென்ற பின்னும் அவள் சென்ற திக்கையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தார் பரமானந்தர்!

அன்று இரவு, நீண்ட நேரத்திற்கு பின், வீடு திரும்பிய பாரேஷ், பூட்டிய கதவு திறந்து கிடப்பதைக் கண்டான்! கௌரி, பரமானந்தர் வீட்டிக்கு, சென்று வந்தாள் என்று தெரிந்து கொண்டபோது, அவனுடைய சந்தேகம், துளிர் விட்டு, தழைத்தோங்கியது.

மறுநாள்....

காவலாளி ஒருவன், பாரேஷால் நியமிக்கப் பட்டான். கௌரி, வெளியே செல்லாமல் பார்த்துக்கொள்வது அவன் வேலை!

இந்த ஏற்பாடு கௌரியின் மனதை மிகவும் வாட்டியது! கணவன் மீதிருந்த கொஞ்ச நஞ்ச அன்பும் இதனால் மறைந்த விட்டது. உணர்ச்சிகளால் உருவாக்கப்பட்டவள் பெண் என்பதை மறந்துவிட்டு, ஏதோ பொருளை புரட்டி வைப்பது போல, தன்னையும் நடத்துகிறாரே என்பதை நினைத்த போது.......அவள் உள்ளம் வேதனையில் விம்மியது! கண்கள் குளமாயின!

அந்த இளம் இதயத்தில் அப்போதெழுந்த எண்ணங்களை எழுத்தோவிய மாக்கினால் அது ஒரு சோகச் சித்திரமாயிருக்கும்!

பாரேஷின் இந்தச் செய்கை, பரமானந்தருக்கு எட்டிய போது, அவர் உள்ளம் நடுங்கியது! எப்பொழுதாவது, ஆத்திரத்தில், அவன் ஏதாவது செய்துவிட்டால்..........என்ற எண்ணம் அவர் மனதில், பீதியையும், பயத்தையும் நடமாட விட்டது! கடைசியில்......அந்த ஊரைவிட்டே சென்றுவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்.

ஆனால்.......பிறகு, கௌரியை பார்க்க முடியாதே என்ற எண்ணம் எழுந்ததும்......!இருதலைக் கொள்ளி எறும்பு என்று உவமைகூறுவார்களே அப்படித்தான்ஆயிற்று அவரது நிலையும்!

ஆசா பாசங்களை அடக்கிய வருக்கா கௌரியைப் பற்றிய நினைவுகள்.......! வியப்பாகத் தான் இருக்கும்! என்ன செய்வது? அவர் தூங்கியபோது கண்ட கனவுகள்—அந்தக் கனவுகளில் தோற்றமளித்த மதிமுகம்—விழித்த பிறகும், மறைந்த கனவில் வந்த மோகன உருவத்தைச் சுற்றி ஓடும் மனம்—மனத்தில் கொப்பளிக்கும் ஆசை எண்ணங்கள் — இவையெல்லாம் யாருக்குத் தெரியும்? உதட்டிலிருந்து நழுவும் சொற்களும், உள்ளத்திலிருந்து ஊறி வரும் எண்ணங்களும் இரு துருவங்களாக இருந்தனவே!

பரமானந்தர் மூளை சுறுசுறுப்புடன் வேலை செய்தது!

"அவளையும் கூடவே, அழைத்துச் சென்றால்......"

அவருடைய மனதில் பட்டுத் தெறித்த இந்த எண்ணம் வினாடிக்கு வினாடி வளர்ந்தது!

* * *

காலை நேரம்!

கௌரி, தன்னுடைய அறையில் அமர்ந்திருந்தாள். அவள் எதிரே உள்ள அந்த சிறு ஜன்னல்..........! அதுதான் அவள் வாழ்க்கைக்கு உயிரூட்டிவந்தது. பாலைவனத்துச் சோலையைப் போல அது அவருக்கு இன்பம் தந்தது!

ஆம்! எங்கேயோ, எதற்காகவோ சென்றுகொண்டிருக்கும்

மனிதர்கள்—ஓடிவிளையாடும் சிறிவர்கள் — இவர்களெல்லாம் மனிதர்களா, அல்லது மிருகங்களா என்ற சந்தேகத்தை எழுப்பும் பாரிகள் — கதிரோனின் ஒளிக் கற்றைகள் இறக்கைகளை பொன் தகடுகளாக்க பறக்கும் பறவைக் கூட்டங்கள் — நீலப் பட்டாடையை விரித்து வைத்திருப்பது போலத் தோன்றும் வானம்—ஒளி பொழியும் வண்ண நிலவு, கண்சிமிட்டும் தாரகைகள்—இப்படி எத்தனை எத்தனையோ காட்சிகளைத்தான் அவள் அந்த ஜன்னல் மூலம் கண்டாள். ஆனால்..........

அதுதான் அவளுக்கு ஆறுதலாக இருந்தது. துன்பத் துடிப்பிலே சுழலும் அவள் மனதுக்கு அதுதான் சாந்தியளித்தது! ஏக்கத்தினால் செத்துக்கொண்டிருந்த அவள் உள்ளத்துக்கு அது ஒன்றுதான் — ஜன்னலோரத்தில் அமர்ந்து, ஜன்னல் வழியாக பார்த்துக்கொண்டிருப்பது தான்—அமைதி தந்தது!

கௌரி, எண்ணங்களை பட்டுப்பூச்சிகளாக்கி பறக்கவிட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான், திடீரென்று காகிதச் சுருள் ஒன்று அவள் முன் வந்து விழுந்தது!

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் — ஜன்னல் கம்பிகளினிடையே பாய்ந்த அவள் விழிகள் பரமானந்தர் செல்வதை படம்பிடித்தன!

கீழே கிடந்த கடிதத்தை பரபரப்புடன் எடுத்து பிரித்தாள். அதில்..........

"........அருமைக் குழந்தாய்! எத்தனையோ பெண்கள் இந்த உலகத்தை துறந்து தங்களை கடவுளுக்கு அர்ப்பணித்து முக்தி பெற்றுக்கிறார்கள்! மோட்ச சாம்ராஜ்யத்திலே அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது. குடும்ப வாழ்வு—கணவன்—மனைவி, மக்கள்—இவையெல்லாம் கடவுளிடம் நீ செலுத்துகிற எண்ணங்களில் கறை ஏற்படுத்துகின்றன!

"...உலக பந்தங்களில் கட்டுண்டு கிடக்கும் மக்கள் நல்வழி அடைய துணை புரிவதே என் நோக்கம். நீ, நிம்மதியில்லாது தவிக்கின்றாய் என்று எனக்குத் தெரியும். அன்றொரு நாள் கேட்டாயே, 'இக் குடும்ப வாழ்வின் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று! அதற்காகத்தான் இக் கடிதம் எழுதினேன்.

"......நீ, விரும்பினால், நாளையிரவு என்னை உன் தோட்டத்தில் சந்திக்கவும்......"

கடிதம் முடிந்துவிட்டது! ஆனால் அவளது உள்ளம்........ எண்ணப் புயலின் நிலைக்களமாக ஆனது!

நாளையிரவு சந்திக்கவேண்டுமாம்...ஏன்? எதற்காக? இரவில் சந்திக்க வேண்டுமாம்—அதுவும் தோட்டத்தில்...பகலில் சந்தித்தால் என்ன? பிறர் பார்த்துவிடக்கூடாது என்ற பயமா?......ஒரு வேளை ஏதாவது கெட்ட நினைவுகளோடு...! சே சே! இல்லை! இருக்காது! அவர்தான் முற்றுந்துறந்த முனி புங்கவராயிற்றே! பரிசுத்த ஆத்மாவாயிற்றே!.....அப்படியானால் பகலில், பகிரங்கமாக சந்திக்கலாமே! அதை விட்டு விட்டு......

என்ன அலைகள், அவளது உள்ளக் கடலில் கொந்தளித்தபடி இருந்தன! அவள் மனதிலெழுந்த கேள்விகள், ஓங்காரக் கூச்சலிட்டு, ஆர்ப்பரித்த வண்ணமிருந்தன......

அவளுடைய மனதில் வீசிக் கொண்டிருந்த எண்ணப்புயல் அடங்க வெகு நேரம் ஆயிற்று!

* * *

மறுநாள்......மாலை நேரம்!

கௌரி, அதே ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்தாள்.

வானத்தில் வட்டமிடும் பறவைகளைச் சுற்றி வட்டமிட்டன அவள் விழிகள்! காண்போரைக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி படைத்திருந்த அவள் கண்களில் இப்போது துயரமும், வெறுப்புமே, குழைத்துப் பூசப்பட்டிருந்தன! இதழ் விரித்து, இனிய மணம் பரப்பும் வண்ண மலர் போன்ற அவள் வதனத்தில் இன்று ஏக்கத்தின் ரேகைகள் படிந்திருந்தன! சுழன்றடித்த சூறாவளியால் சிதைந்து சின்னாபின்னமான குடிசையைப் போல, சூன்யமாக இருந்தது அவள் மனம்! அமைதி குடிகொண்டிருந்த அவள் உள்ளத்தில் ஆயிரமாயிரம் சிந்தனைக் கிறல்கள்!......

மாதாகோயிலிலிருந்து கிளம்பிய மணியோசை, கௌரியை, சிந்தனையுலகிலிருந்து காரிய உலகுக்கு இழுத்து வந்தது! தெருவிலிருந்து கிளம்பிய பலதரப்பட்ட ஓசைகளும் அவள் காதில் நன்கு விழுந்தன......

"கடிதம் எழுதினேனே. வந்ததா?........"

திடுக்கிட்டாள் கௌரி! அவளுடைய விழிகள் தெருவைநோக்கி தாமாகவே திரும்பின.

யாரோ இருவர் பேசிக்கொண்டு சென்றனர். அவர்கள் பேச்சிலே ஒலித்த 'கடிதம்' என்ற சொல், கௌரிக்கு பரமானந்தரின் கடிதத்தை நினைவுபடுத்திற்று......அப்போதுதான், "கடிதத்தை, மறைத்து வைக்கவில்லையே! கணவன் பார்வையில் பட்டுவிட்டால்......" என்ற நினைவும் கூடவே எழுந்தது!

உடனே எழுந்தாள் — ஓடினாள் கடிதமிருந்த இடத்தை நோக்கி!

"ஆ.....................!"

கடிதத்தைக் காணாது, கலங்கிய உள்ளத்தோடு, கணவன் அறையில் நுழைந்த கௌரியிடமிருந்து, பயங்கரமான அலறல் ஒன்று வெடித்துச் சிதறியது!

(14-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 31—5—52 சனிக்கிழமை


# புயலும் படகும்!

"பொதுமக்களுக்கு இந்தப் பட்ஜெட்டால் எந்தவித நன்மையும் ஏற்படாது."

—சர்தார் ஹுகும் சிங்

"முன் காலத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தால் வகுக்கப்பட்ட பட்ஜெட்டுகளுக்கும் இந்தப் பட்ஜெட்டுக்கு மிடையே எந்தவித வேறுபாடும் கிடையாது. பாட்டாளிகள்—ஏழைகள்—மத்திய தர வகுப்பு குமஸ்தாக்கள்—விவசாயிகள்—யாருக்கும் அநுகூலம் கிடையாது இந்தப் பட்ஜெட்டால்."

—ஏ. கே. கோபாலன்

"வெறும் வியாபார தோரணையில் அமைந்துள்ள பட்ஜெட்"

—ஆர். கே. சௌத்ரி

"கொடிய ஏமாற்றத்தைத் தருகிறது இந்தப் பட்ஜெட்"

—கே. ஏ. தாமோதர மேனன்

"உப்பு சப்பில்லாத பட்ஜெட்." —கே. சி. சர்மா

"குறைந்த வருமானமுள்ள பொதுமக்களுக்காவது உணவுப் பிரச்சினையில் மட்டுமாவது ஏதாவது சலுகைகளைத் தரும் இந்தப் பட்ஜெட் என்று எதிர்பார்த்தோம், ஆனால் பலத்த ஏமாற்றமே நமக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது."

—ஆர். வெங்கட்ராமன்

"இது ஒரு முதலாளித்வ பட்ஜெட்—ஏழை மக்களின் பட்ஜெட் அல்ல. நாடு என்ன நினைக்கிறது என்பதைப் பற்றித் துளியும் கவலையின்றித் தங்கள் மனம்போனபடியே இந்த சர்க்கார் நடந்துகொள்ள இருக்கிறார்கள் என்பதைத்தான் இந்தப் பட்ஜெட் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

—ஸ்ரீ நீலகண்டன் நாயர்

"ஆறாயிரம் ஆண்டுகளாக எவ்வளவு இழிநிலையில் இருந்துவருகிறார்களோ அதே இழிநிலையில் தான் இனியும் இருக்கும்படி செய்யப்பட்டு விட்டார்கள் ஆதிவாசிகள் (பிற்படுத்தப்பட்ட மக்கள்) அவர்களுடைய நிலைமை இந்தப் பட்ஜெட் இம்மியளவு கூட உயர்த்தவில்லை."

—ஜெயபால் சிங்

"ஏழை மக்களுக்குத் துளியும் நன்மை தராத பட்ஜெட்"

—பாட்லு அரசர்

"பணக்கார வர்க்கத்துப் பட்ஜெட் இது" —குருபாதசாமி

"பொது மக்களும் சரி, வியாபாரிகளும் சரி, இந்தப் பட்ஜெட்டை மகிழ்ச்சியுடன் வரவேற்க மாட்டார்கள்."

—பி. நடேசன்

* * *

1952 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1953 மார்ச் 31-ம் தேதி முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்குரிய அகில இந்திய பட்ஜெட்டை அதாவது வரவு செலவுத் திட்டத்தை, இந்த வாரம், டில்லி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள் ஜவஹர் சர்க்கார்.

அப்படி சமர்ப்பிக்கப் பட்டதும், அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துரைகளிற் சிலவற்றைத்தான் நாம் மேலே பொறித்திருக்கிறோம்.

மீண்டும் ஒரு முறை அந்தக் கருத்துரைகளைப் படித்துப் பாருங்கள்—நடைமுறை ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் எவ்வளவு தவறான முறையில் வகுக்கப்பட்டிருக்கிறது என்பது திட்டவட்டமாகவிளங்கிவிடும்.

கருத்துரைகளைத் தந்திருப்பவர்கள் சந்துமுனை சிந்து நடைக்காரர்களல்ல, பொறுப்பற்ற போக்கிரிகளோ வேறு வேலையற்ற வீணர்களோ அல்ல. மக்கள் மனப்போக்கை உணரமுடியாத மகானுபாவர்களுமல்ல அவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மக்களின் பிரதிநிதிகள். தங்களுடைய இதயக் குமுறல்களை ஆட்சியாளர்களிடம் தெரிவிப்பதற்காகப் பொது மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப் பட்டிருப்பவர்கள், மக்களுடைய ஆதரவை, பாராட்டுதலை, இதய பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் நுழைந்திருப்பவர்கள் அவர்கள்.

அவர்களுடைய குரல் மக்களுடைய குரல், இந்திய சமுதாயத்தின் குரல்.

ஆகவே அவர்களுடைய கருத்துரைகளை "சரிதான் போடட்டும் ஒரு மூலையில்!"

என்று யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஒதுக்கித் தள்ளுவதும் ஆகாது.

அவர்கள் கூறுகிறார்கள் ஒரு கருத்துரையை என்றால் அந்தக் கருத்துரைக்கு யாராயிருந்தாலும் சரி மதிப்புக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஏனெனில் அவர்களுடைய கருத்து மக்களுடைய கருத்து. மக்களுடைய உள்ளங்களில் ஆழப் பதிந்துகிடக்கும் கருத்து.

மக்களுடைய உள்ளங்களில் படிந்துகிடக்கும் கருத்துக்களை எடுத்து விளக்கக்கூடிய உரிமையும் கடமையும் படைத்த அவர்கள் கூறுகிறார்கள், இந்தப் பட்ஜெட் ஏழைமக்களின் பட்ஜெட் அல்ல என்று.

"பாட்டாளிகளின் கண்ணீரைத் துடைக்கும் பட்ஜெட்"

"மத்தியதர வர்க்கத்தாரின் மனச்சுமையைக் குறைக்கும் பட்ஜெட்."

"உழவர் குலத்தவரின் வாழ்க்கையை வளமாக்கும்பட்ஜெட்."

இப்படியெல்லாம் பேசவில்லை பாராளுமன்றத்தின் அந்த உறுப்பினர்கள்.

"உப்புசப்பற்ற உதவாக்கரை பட்ஜெட்"

"ஏழை மக்களின் இதயத்திற்கு இன்பத்தை அளிக்காத பட்ஜெட்"

"மத்தியதர மக்களுக்குத் துளியும் நன்மையைத் தரமுடியாத பட்ஜெட்"

இப்படித்தான் பேசியிருக்கின்றனர் அந்தப் பாராளுமன்றத்து உறுப்பினர்கள்.

அந்த உறுப்பினர்கள் மட்டுமல்ல. இந்தப் பட்ஜெட்டை நடுநிலைக் கண்களோடு கூர்ந்து கவனிக்கும் யாரும் இப்படித்தான் பேசமுடியும்.

விலைவாசிகளின் பளுவைத் தாங்க முடியாமல் தத்தளிக்கின்றனர் மத்தியதர மக்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்குண்டு சித்திரவதைக்கு ஆளாகிக் கிடக்கின்றனர் பாட்டாளிகள். கொள் முதல் அதிகாரிகளின் ஆணவப் போக்காலும் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் பஞ்ச நிலைமையாலும் இடுப்பொடிந்து கிடக்கின்றனர் ஏழை விவசாயிகள். உண்ண ஒரு கவளம் உணவுமின்றி, உடுக்க ஒரு முழம் கந்தையுமின்றி, "சாவே-நீ வாராயோ?" என்று சோக கீதம் பாடிக்கொண்டு பரிதாப சித்திரங்களாக உலவிக்கொண்டிருக்கின்றனர் கோடிக்கணக்கான மக்கள்.

இவர்களுடைய துயரத்திற்கெல்லாம் ஏதாவது ஒரு பரிகாரத்தைத் தேடித்தரும் இந்த ஆண்டு பட்ஜெட் என்று நாடு எதிர்பார்த்தது.

ஆனால் மிகக் கொடிய ஏமாற்றமே அதற்குப் பதிலாகக் கிடைத்திருக்கிறது.

மக்களின் துயரத்தைத் துடைப்பதற்கான எந்தவித திட்டத்தையும் தீட்டித் தரவில்லை இந்த ஆண்டின் பட்ஜெட்.

சென்ற பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் வரிகள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஏழை மக்கள் தலைமீது சுமத்தப்பட்டு வந்தன.

அந்த வரிகளின் சுமையைத் தாங்கமுடியாமல பொதுமக்களின் கழுத்து முறிந்து கொண்டிருக்கிறது.

இப்போது பொதுமக்கள் சுமந்து வருகிற அளவு வரிச் சுமையை இதற்கு முன்பு எப்போதுமே அவர்கள் சுமந்தது கிடையாது.

கொடுங்கோலர்கள் என்று தூற்றப்பட்ட பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சிக் காலத்திலே கூட வரிகள் இன்று இருக்கிற அளவு பளு மிகுந்ததாக இருந்தது கிடையாது.

வரிகள் என்று இனி புதிதாக எதையும் யாரும் கண்டுபிடித்துவிட முடியாது. அவ்வளவு ஏராளமான வரிகளை விதித்திருக்கிறார்கள், விதித்து ஏழை மக்களின் முதுகை முறித்திருக்கிறார்கள், ஏழை பங்காளர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஜவஹர் சீடர்கள்.

அவர்கள் விதித்துள்ள வரிகளிலே சில விசித்திரமானவை. சில விபரீதமானவை. சில வேடிக்கையானவை. சில, உலகத்திலே இதுவரை வேறு எங்குமே விதிக்கப்படாதவை. சில, மிகக் கொடுமையானவை. ஆனால் ஏறத்தாழ அவை அனைத்துமே பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும் விவசாயி குலத்தின் வீடுகளையும் வதைப்பவை.

இந்த வரிகளில் சிலவற்றையாவது ஒழித்துவிட்டிருக்கலாம் ஆட்சியாளர்கள். புதிய பட்ஜெட்டின் மூலம் சில வரிகளாவது ஒழிந்திருந்தால் பொதுமக்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்பட்டிருக்கும். அவர்களுடைய கழுத்தை முறித்துவரும் வாழ்க்கைச் சுமை சிறிதளவாவது குறைந்திருக்கும்.

**ஆனால் இந்த ஆண்டின் பட்ஜெட் இருக்கும் வரிகளிலே ஒரே ஒரு வரியைக் கூட ஒழிக்கவில்லை.**

சென்ற ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டபோது ஆண்டு முடிவில் 26 கோடி ரூபாம் மிச்சமிருக்கும் என்று ஆட்சியாளர்கள் எதிர் பார்த்தார்கள்.

ஆனால் உண்மையில் அந்த ஆண்டு முடிந்து வரவு செலவுக் கணக்குகளை எழுதிப் பார்த்த போது, 26 கோடி ரூபாய், அல்ல 92 கோடி ரூபாய் மிச்சமாயிருக்கிறது என்கிற சேதி தெரிய வந்தது.

எதிர் பார்த்தது 26 கோடி தான்.

(12 பக்கம் பார்க்க)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களுக்கு? (சட்டென்று பின்னல் திரும்பிப் பார்க்கிருன். அங்கே வக்கீல் வரதராஜ அய்யங்கார் இருப்பதைக் காண்கிருன். அவரைப் பார்த்தபடி) அடடே வக்கீல் சாரா? நீங்க எப்ப வந்தீர்கள் இங்கே? நான் பார்க்கவேயில்லையே!

வரத: பரந்தாமன் இந்தப் பிராமணப்பயலைப்பார்ப்பாரா? யாராச்சும் சூனுமானுவா இருந்தா உடனே பார்ப்பார்! என்னைப் பார்ப்பாரோ?

பரந்: செச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. சூனுமாக்களைப் பார்க்காமல் இருந்தாலும் இருக்கலாம், உங்களைப் பார்க்காமல் இருக்கமுடியுமா? நீங்களும் உங்களைப்போன்றவர்களும் செய்கிற காரியங்களை கவனித்தால்தானே எங்கள் இயக்கத்தை நாங்கள் திறமையாக நடத்தமுடியும்? (செட்டியாரைப் பார்த்து) என்னை என்னவோ கேட்க வேண்டுமென்று சொன்னீர்களே என்ன கேட்க வேண்டும்?

வரத: செட்டியார் என்ன தம்பி! நானதான் கேட்கிறேன்! ராஜாஜி மழைக்காகப் பிராத்தனை செய்யுங்கோன்னு சொன்னப்போ கேலி செய்தியேன்னே?

பரந்: ஆமாம் செய்தேன். இப்போ மழை பொழிந்துவிட்டதே நீ செய்த கேலி என்ன ஆச்சு என்று கேட்கிறீர்களா?

உலக: ஆமாம் தம்பி, அதைத்தான் நானும் கேட்கிறேன். அவரும் அதைத்தான் கேட்கிறார்.

[கடைக்கார பையன் கந்தன், தன மனதுக்குள்:—"தி. மு. க. ஒருத்தன் இருந்தாலே அந்த இடமே ஒரு தினுசாகத்தான் மாறிடுது. இதுவரைக்கும் செட்டியார், அய்யங்காரை ஸ்வாமி தேவா அப்படி இப்படின்னு சொன்னரு இப்பஎன்னடான்ன அவரு இவரு என்று சாதாரணமாப் பேசறாரு! தி. மு. க. ஒருத்தன் இருந்தா,மத்தவங்க பேச்சே இல்ல மாறிடுது! மான ரோஷம் இல்லாத மனிதன் கூட சூனுமானுவா இல்ல மாறிடருன அவங்க வந்தா!"]

வரத: என்ன தம்பி சும்மா நிக்கிறே! (செட்டியாரைப் பார்த்து) பாரத்தீரா ஓய் தம்பி முழிக்கிறதை! பிரார்த்தனை செய்யுங்கோ மழை வருமன்னு ராஜாஜி சொன்னார். பிரார்த்தனையால் மழை வருவதாவது, பொடலங்காயாவது, அப்படன்னு தம்பி கேலி செய்தது. ஆனா ராஜாஜி சொன்னபடி. ராஜாஜி பிரார்த்தனை செய்தார் மழையும் பொழிந்தது. இப்ப, தம்பி, பதில் சொல்லத் தெரியாம முழிக்குது. ஏன் தம்பி, அப்படித்தானே?

உலக: என்ன தம்பி, வக்கிலய்யா என்னமோ சொல்றாரே.

பரந்: என்ன சொல்றார் அய்யங்கார்? ராஜாஜி பிரார்த்தனை செய்ததால்தான் மழை வந்ததுன்னு சொல்றாரோ?

உலக: அவர் மட்டுமா? நானும் தான் சொல்றேன். இப்ப மழை பொழிஞ்சதில்லே! அதுக்குக் காரணம் ராஜாஜி செய்த பிரார்த்தனை தான்னு சொல்றேன்.

பரந்: அப்படியா சொல்றீங்க? அப்படின்னா நான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்றீங்களா?

வரத: கேள்வி! கேள்வி! கேள்வி! இந்த சூனுமானுக்களின் பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம் இதான்!

பரந்: வக்கில் சார், கேள்வி என்ற பதத்தைக் கேட்டாலே ஏன் தங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது? எதற்கெடுத்தாலும் ஏன் எப்படி எதற்காக என்கிற கேள்விகளை கேட்டுக் கேட்டுத்தானே உலகம் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது?

உலக: அது இருக்கட்டும் தம்பி, நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்றே?

பரந்: ராஜாஜி பிரார்த்தனை பண்ணுர், அதனுலே மழைவந்துதுன்னுதானே நீங்க சொல்றீங்க?

உலக: ஆமாம்.

பரந்: போனவருஷமும், அதற்கு முன் வருஷமும், அதற்கு முன் வருஷமும் கூட ராஜாஜி உயிரோடு தானே இருந்தார்? பிரார்த்தனை செய்து மழையை வரவழைக்கிற சக்தி அவருக்கு இருந்தா, ஏன் அப்போதெல்லாம் அவர் மழையை வரவழைக்கவில்லை?

உலக: இது என்ன கேள்வி தம்பி? அப்போதெல்லாம் அவர் பிரதம மந்திரியாக இல்லையே?

பரந்: பிரதம மந்திரியாக இல்லை. ஆனல் அதைவிட உயர்ந்த பதவியிலே இருந்தார். கவர்னராகவும் கவர்னர் ஜெனரலாகவும் இருந்தார். அப்போதெல்லாம்கூடத் தான் கொடிய பஞ்சம் நாட்டிலே தலைவிரித்தாடியது. பருவ மழை பொழியாமல் மக்கள் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். பிரார்த்தனை மூலமாக மழையை வரவழைக்கிற சக்தி ராஜாஜிக்கு இருந்தா, ஏன் சென்ற ஐந்தாறு வருஷங்களாக அந்த சக்தியைப் பிரயோகிக்காம அவர் சும்மா கிடந்தார்? மழையை வரவழைக்கிற சக்தி இருந்தும், அந்த சக்தியை உபயோகித்து மழையை வரவழைக்காமல் இருந்தா அது மகா குற்றமாகாதா? அல்லது பிரார்த்தனை மூலம் மழையை வரவழைக்கிறசக்தி இப்போது தான் ராஜாஜிக்குப் புதிதாக ஏற்பட்டிருக்கிறதா? ஏதோ சென்ற நான்கைந்து ஆண்டுகளாக அடிக்காத பருவக்காற்று இந்த ஆண்டு அடித்தது. மழைபொழிந்தது. அவ்வளவுதான். இதற்கும் ராஜாஜிக்கும் என்ன சம்பந்தம்? ஏன் செட்டியாரே பேசாமல் இருக்கிறீர்?

உலக: என்ன தம்பி, எதை எதையோ சொல்லி என்மூளையைக் குழப்பிட்டியே? அப்படன்னா இப்ப மழைபேஞ்சதுக்கு ராஜாஜி காரணமில்லைன்னு சொல்றே?

பரந்: ராஜாஜியாவது பொடலங்காயாவது? பிரார்த்தனை பண்ணுர், அதனுல்தான் மழை வந்துதுன்னு சொல்றது, அப்துல் காதர் உண்ணுவிரதம் இருந்தான் அதனுல் தான் அமாவாசை நேற்று வந்தது என்று சொல்றது போன்ற புத்திசாலித்தனம்தானே தவிர வேறு ஒன்றுமில்லை. (வக்கில் வரதராஜ அய்யங்காரைப் பார்த்து) செட்டியார் இப்படியெல்லாம் நம்பறதுலே ஆச்சரியம் ஒண்ணுமில்லை. ஆனல் நீங்கள்கூட நம்பறீங்களே இந்த மூட நம்பிக்கையை? விஞ்ஞானம் படித்து, ஆங்கிலம் கற்று, பட்டம் பெற்று, மழை தோன்றும் காரணங்களையெல்லாம் நன்ருக அறிந்து கொண்டிருக்கிற நீங்கள்கூடவா ராஜாஜியால்தான் மழை வந்துதுன்னு நம்பறது?

வரத: (அசடு வழியும் முகத்துடன்) ராஜாஜி ஒருத்தர் மட்டும் பிரார்த்தனைசெய்ததாலதான் மழை வந்துதுன்னு நான் சொல்லலே. ஜனங்க எல்லாம் பிரார்த்தனை செய்தாளேல்லியோ, அதனுல்தான் வந்திருக்கும்ன்னு சொல்றேன் நான்;

பரந்: சொல்றேளா? சொல்வீர், சொலவீர், பிராமணு பேசறதெல்லாம் வேதவாக்குன்னு நம்பற

ஏமாளித் தமிழன் இருக்கிறவரைக்கும் இதானு சொல்வீர்? இன்னும் என்னென்னமோ சொல்வீர்? ஏன் சொல்லமாட்டீர்?

உலக: அடடே என்ன தம்பி கோபிச்சிக்கிறே?

பரங்: வேறென்ன செட்டியார்? ஜனங்களெல்லாம் பிரார்த்தனை செய்தார்கள், அதனுல்தான் மழை வந்துதுன்னு சொல்ருரே இவர், போன வருஷம் மட்டுமென்ன ஜனங்களெல்லாம் நாஸ்திகர்களாகவா இருந்தார்கள். [போன வருஷம் மட்டுமென்ன ஜனங்களெல்லாம் நாஸ்திகர்களாகவா இருந்தார்கள்.] போன வருஷம் மட்டும் அவர்களெல்லாம் கோயிலுக்குப் போகாமலா இருந்தார்கள்? இந்த வருஷம் மட்டும் தானு அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்? வருஷா வருஷம், மாதா மாதம், வாரா வாரம் பிரார்த்தனை செய்துகொண்டுதான் இருக்கிருர்கள் நம் மக்கள். ஒவ்வொரு தினமும் கோயிலில் அபிஷேகம் நடந்துகொண்டுதான் இருக்கு. காஞ்சி காமாட்சி—மதுரை மீனுட்சி—திருச்சி ரங்கநாதர் — திருவாரூர் தியாகராஜர் —திருப்பதி வெங்கடேசுவரர்—எந்தக் கோயிலாகட்டும், ஒரே ஒரு நாள், பிரார்த்தனையும் பூஜையும் நடக்காமல் இருக்கிறதோ? தினந்தோறும் நடந்தபடிதானே இருக்கு?

உலக: நிச்சயமா! நடந்துகொண்டுதான் இருக்குது!

பரங்: பிறகென்ன? பிறகு ஏன் போன வருஷம் மழை பொழியல்லே? ஜனங்களெல்லாம் இந்த வருஷம் பிரார்த்தனை செய்தார்கள் அதனுல்தான் மழை பொழிந்தது என்பது உண்மையானுல் போன வருஷமுந்தான் ஜனங்கள் பிரார்த்தனை செய்தார்கள். ஏன் அப்போ மழை பொழியல்லே? அதற்கு முன் வருஷமும், அதற்கு முந்திய வருஷமுங்கூடத்தான் பிரார்த்தனை செய்தாங்க ஏன் அப்போ எல்லாம் மழை எட்டிக் கூடப் பார்க்கவில்லே?

உலக: அதனுலே......

வரத; பிரார்த்தனைக்கும் மழைக்கும் துளிக்கூட சம்பந்தமில்லே; சம்பந்தப்படுத்தறது முட்டாள்தனமுன்னு தம்பி சொல்ருன்.

பரங்: முட்டாள்தனமுன்னு சொல்லலே......

வரத: அதுதான், வார்த்தையை அவ்வளவு கடுமைப்பாக சொல்லலே, ஆனு நீ சொல்றதுக்கு அர்த்தம் அதுதானே?

உலக: என்னமோ எனக்குக் கூட தம்பி சொல்றது நியாயம்னுதான் படறது. பிரார்த்தனையாலே மழை வரும் அப்படின்றது உண்மையாயிருந்தா, ஒவ்வொரு வருஷமும், வருஷத்திலே 365 நாளும் மழை பொழிஞ்சிண்டல்லவோ இருக்கணும்? வக்கில் ஐயா, நீங்களே சொல்லுங்க, தினம் தினம்தானே நாம பிரார்த்தனை செய்துண்டிருக்கோம், ஆகவே தினம்தினம்தானே மழை பொழியணும்? [பரந்தாமனைப் பார்த்து] தம்பி, உன்னை நான் ஏதோ சின்னப் பய, விஷயம் தெரியாதவன், அப்படி இப்படின்னு நெனச்சிட்டிருந்தேன். ஆனு நீ அபார புத்திசாலியாயிருக்கியே! நல்லா பேசிர எங்க ரெண்டு பேரையும் மடக்கிட்டியே

[என்று சொல்கிறபோது ரெண்டு பேரையும் என்பதை சற்று அழுத்திச் சொல்லிவிட்டு, வக்கில் முகத்தைப் பார்க்கிருர். வக்கில், கடைப் பையன் கந்தசாமியைப் பார்க்கிருர், கந்தசாமியோ, எப்படியோ எங்க செட்டியாரைத் தலை குனிய வைத்துவிட்டாயே என்ற அர்த்தம் தொனிக்க பரந்தாமனைப் பார்க்கிருன். பரந்தாமனே, வக்கிலாக வந்தும்கூட மூட நம்பிக்கையை வளர்க்கிற பஞ்சாங்கப் புத்தி உம்மைவிட்டுப் போகவில்லையே என்று பேசுவது போன்ற பார்வையை வக்கில் வரதராஜர்மீது வீசுகிருன்.]

வரத: (எழுந்து நின்று கொண்டே) செட்டியார்வாள், எனக்குக் கொஞ்சம் அவசரவேலையிருக்கு. போயிட்டு அப்புறம் ஒரு நாள் வரேன். சாவகாசமா பேசுவோம்.

பரங்: இருங்க இருங்க வக்கில் சார்! நான் உங்க கேள்விக்கு இன்னும் முழுக்க பதில் சொல்லி முடிக்கல்லே. அதுக்குள்ளே போக ஆரம்பிச்சிட்டிங்களே!

வரத: போதும் தம்பி உன் பதில் புரியுது அவசர ஜோலியிருக்கு. அப்புறமா பேசுவமே!

உலக: விட்டுடு தம்பி! போகட்டும்! (வக்கிலைப் பார்த்து) அப்ப, போயிட்டு வரீங்களா? எப்ப வரீங்க மறுபடியும்? நாளைக்கு வரீங்களா?

வரத: ஆகட்டும் ஆகட்டும் (என்று சொல்லிக் கொண்டே போகிருர்.)

பரங்: அப்ப, நானும் போயிட்டு வரேன் (என்று சொல்லிவிட்டு, பருப்பை வாங்கிக்கொண்டு போகிருன்.)

உலக: (தன் மனதுக்குள்—எல்லோரும் போய்விட்ட பிறகு) பாவம்! இன்னிக்கு, அய்யங்கார் மூஞ்சி சின்னதாப் போச்சி! பரந்தாமன் பேசப்பேச, அவர் மூஞ்சிலே அசடு இல்லே வழிய ஆரம்பிச்சிட்டுது! அவன் வர்ரதுக்கு முன்னே எப்படி குதிச்சாரு! ஆனு அவன் வந்தப்புறம் பெட்டிப் பாம்பா அல்ல அடங்கிட்டாரு! இந்த அய்யங்கார் பேச்சைக் கேட்டுக்கிட்டு நானுந்தான் ஓயாம திட்டிக்கிட்டிருந்தேன் திராவிட முன்னேற்றக் கழகத்தை! ஆனு அவங்க சொல்றது அவ்வளவும் நியாயம் இன்றது இப்பல்ல தெரியுது, சரி சரி. மெள்ள, சமயம் பார்த்து, நைசா, நம்ம கடையிலே பறக்கிற காங்கிரஸ் கொடியையும் எடுத்து எறிந்திட வேண்டியதுதான்......]


எல்லாம்

## புதிய புத்தகங்கள்

தமிழகம் (அண்ணு) 1 0

பிளேட்டோ

அரசியல் அறிஞன் பிளேட்டோவின் வரலாறும் தத்துவங்களும் 1 8

எழிலரசி கிளியோபாட்ரா

நெஞ்சை அள்ளும் கருத்தோவியம் 1 0

மாஜிகடவுள்கள்

குடும்பம் குடும்பமாக உள்ள கடவுள்களின் கதி என்ன என்பது விளக்கப்படுகிறது 0 8

சுழல்விளக்கு

(மு. கருணாநிதியின் கருத்துக் குவியல்) 1 0

துடிக்கும் இளமை

(மு. கருணாநிதி) இரண்டாம் பதிப்பு 0 6

பகுத்தறிவுப் பாசறை
131, பிராட்வே, சென்னை.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கிடைத்ததோ 92 கோடி.

இவ்வாறாக எதிர்பார்த்ததை விட ஏறத்தாழ நான்கு மடங்கு அளவு அதிகமான பணம் ஆட்சியாளரிடம் மிச்சமாகியிருக்கிறது சென்ற ஆண்டு.

இவ்வளவு பெருந்தொகை சென்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கில் மிச்சமாகி, ஆட்சியாளரின் பொக்கிஷத்தில் நிரம்பி வழியும் காரணத்தால், இந்த ஆண்டின் பட்ஜெட்டில், சில வரிகளையாவது ஒழித்துவிடுவார்கள் ஆட்சியாளர்கள் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் ஏமாந்தனர். வரிகளிலே ஒன்றுகூட ஒழிக்கப்படவில்லை.

அன்று இருந்த மேனிக்கு அழிவு இல்லை என்பதுபோல, ஒவ்வொரு வரியும் சென்ற ஆண்டு எப்படி இருந்ததோ அப்படியேதான் இந்த ஆண்டும் இருக்கும். அந்த வரிகள், சென்ற ஆண்டு எப்படி பொது மக்களின் துயரத்தை ஒன்று பத்து நூறாக வளர்த்தனவோ அப்படியேதான் இந்த ஆண்டும் வளர்க்கும்.

புதிய பட்ஜெட், இந்த உண்மையைச் சிறிதும் சந்தேகப்படுவதற்கு இடமின்றி மிகத் தெளிவாக விளக்கிவிட்டது.

* * *

சென்ற ஆண்டு வரையில், உணவு மானியம் என்ற பெயரால், மத்திய ஆட்சியாளர்கள், மாகாண ஆட்சியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஓரளவு தொகையை ஒதுக்கி வந்தார்கள்.

சென்ற ஆண்டில் மட்டும் இந்த விதமாக மத்திய ஆட்சியாளர்களிடமிருந்து மாகாண ஆட்சியாளர்களுக்குக் கிடைத்திருக்கிற உணவு மான்யத் தொகை ரூபாய் முப்பத்தெட்டு கோடி.

இந்த உணவு மான்யத் தொகையின் உதவியைக் கொண்டுதான் மாகாண ஆட்சியாளர்கள், அதிக விலைக்கு வாங்கிய உணவுப் பொருளை, ஓரளவு குறைந்த விலைக்குப் பொதுமக்களிடம் விற்றுவந்தார்கள்.

ஆனால் புதிய பட்ஜெட், இந்த உதவித் தொகையின் அளவை பதினைந்து கோடி ரூபாயாகக் குறைத்துவிட்டது.

அதாவது சென்ற ஆண்டு கிடைத்த உதவித் தொகையை விட இந்த ஆண்டு இருபத்து மூன்று கோடி ரூபாய் குறைவாகத்தான் கிடைக்கும் மாகாண ஆட்சியாளர்களுக்கு.

உணவு மான்யத் தொகையில் இவ்வளவு பெரிய வெட்டு ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இனி, மாகாண ஆட்சியாளர்கள், முன்போல, உணவுப் பொருளின் விலையைக் குறைவான நிலையில் நிறுத்திவைக்க முடியாது.

இயற்கையாகவே இனி பங்கீட்டு உணவுப் பொருள்களின் விலை முன் இருந்ததைவிட உயரமான அளவுக்குத் தாவிக் குதிப்பது உறுதி.

உணவுப் பொருள்களின் விலை உயருமானால் நடுத்தர மக்கள்—பாட்டாளி மக்கள் ஆகியோரின் பண நெருக்கடி மேலும் அதிகமாகும் என்பதும் நிச்சயம்.

அவர்களின் பண நெருக்கடி அதிகமானால், அதனால், அவர்களுடைய வாழ்க்கையை வதைக்கும் வேதனை மேலும் சற்று கூடுதலாகும் என்பதற்கும் வாதம் தேவையில்லை.

ஏழை மக்கள், தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை, உணவுப் பொருளுக்காகவே செலவழித்து விடுகின்றனர்.

ஏனெனில் ஏறத்தாழ அவர்கள் சம்பாதிக்கும் பணம் உணவுப் பொருளுக்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கிறது.

இந்த நிலையில் உணவுப் பொருளின் விலை அதிகமாகுமானால் ஏழை மக்களின் துயரம் எப்படி வராமல் இருக்கமுடியும்?

* * *

புதிய பட்ஜெட், மாகாணங்களுக்குத் தரப்படவேண்டிய உணவு மான்யத்தைக் குறைக்கிறது; அப்படிக் குறைப்பதன் மூலமாக உணவுப் பொருள்களின் விலையை உயர்த்துகிறது; அந்த விலையை உயர்த்துவதன் மூலமாக ஏழை மக்களின் வேதனையை என்றும் சிரஞ்சீவியாக ஆக்குகிறது.

* * *

வெளிநாட்டுத் தூதுவர்கள் என்ற பெயரால் இந்தியாவிலிருந்து பற்பல நாடுகளுக்கும் சென்றுள்ள இந்திய அதிகாரிகள் ராஜபோக வாழ்வு வாழ்கின்றார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐதராபாத் நைஜாம் போல பணத்தை வாரி இறைத்து வீண் செலவு செய்து வருகின்றார்கள்.

ஒத்தை ரூபாயில் முடிய வேண்டிய காரியத்திற்கு அவர்கள் பத்து ரூபாய் செலவழிக்கின்றார்கள்.

பத்து ரூபாயில் வாங்கவேண்டிய பண்டத்தை அவர்கள் நூறு ரூபாய் கொடுத்து வாங்குகின்றார்கள்.

போக வர ஒரு கார் இருந்தால் போதாது என்று அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு ஐந்து கார்கள், பத்து கார்கள் என்று வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ரஷ்யா, சீனா போன்ற வல்லரசுகளின் தூதுவர்களெல்லாம் ஆயிரம் ரூபாய், ஐந்நூறு ரூபாய் என்று வாடகை செலுத்தப்பட வேண்டிய மாளிகைகளில் தங்கியிருந்தால், இவர்கள் ஐயாயிரம் பத்தாயிரம் என்று வாடகை

செலுத்தப்பட வேண்டிய பிரம்மாண்டமான அரண்மனைகளில் தர்பார் செலுத்துகிறார்கள்.

வெளிநாட்டு தூதுவர்கள் மட்டும்தான் பணத்தை இப்படி வாரி இறைத்து விளுக்குகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது.

உள் நாட்டில் கவர்னர்களாகவும் மந்திரிகளாகவும் ஜனாதிபதியாகவும் கொலுவீற்றிருக்கும் காங்கிரஸ் கண்ணியவான்களும் இப்படித்தான் கரன்சி நோட்டுக்களைக் கத்தை கத்தையாக அடுக்கி, அவற்றின் மீது படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்க அதிகாரிகளும் மந்திரிகளும் இப்படி பணத்தின்மீது படுத்துப் புரளும் காரணத்தால் அரசாங்கச் செலவு மட்டும் புதிய பட்ஜெட்டின்படி ஐம்பத்தாறு கோடி ரூபாய் ஆகிறது.

நிர்வாகச் செலவு என்கிற பிரம்மாண்டமான காட்டை சிக்கனக் கோடரி கொண்டு வெட்டித் தள்ள ஆரம்பித்தால், இந்த ஐம்பத்தாறு கோடி ரூபாயையாவது மிச்சப்படுத்தமுடியும். அப்படி மிச்சமாகிற தொகையைக் கொண்டு பொது மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்ய முடியும்.

ஆனால் ஜவஹர் சர்க்காரா அந்தக் காரியத்தைச் செய்யும்?

அதுதானே கிடையாது!

நிர்வாகச் செலவை அப்படி ஒன்றும் பிரமாதமாகக் குறைக்கமுடியாது என்று தெரிவித்துவிட்டது.

நிர்வாகச் செலவைக் குறைக்காதது மட்டுமல்ல, சென்ற ஆண்டைவிட, அந்தச் செலவை அதிகமாக்கியிருக்கிறது இந்த ஆண்டு.

சென்ற ஆண்டின் பட்ஜெட்டில் நிர்வாகச் செலவுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை ஐம்பத்து நான்கு கோடியே இருபத்தொன்பது லட்சம்.

ஆனால் இந்த ஆண்டின் பட்ஜெட்டோ ஐம்பத்தைந்து கோடியே தொண்ணூற்றெட்டு லட்சம் ரூபாயை இதற்காகவென்று ஒதுக்கியிருக்கிறது.

ஆக, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு, 169 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாக இருக்கிறது அரசாங்க நிர்வாகத்திற்கு.

வரிகளைக் குறைத்து ஏழைகளுக்கு வாழ்வளிக்க வசதி இல்லை என்று அறிவிக்கும் பட்ஜெட், அதிகார வர்க்கத்தின் கால் பூட்சுகளில் உள்ளபளப்பளப்பை அதிகமாக்குவதற்காக 169 லட்சம் ரூபாயைத் தாராளமாக ஒதுக்கியிருக்கிறது.

* * *

புதிய பட்ஜெட்டின்படி, கடைமுறை ஆண்டில் ஆட்சியாளருக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தின் அளவு, 405 கோடி ரூபாய்.

இந்தத் தொகையில், ராணுவச் செலவுக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் அளவு, 198 கோடி,

ஆம்! மொத்த வருமானத்தில் சரிபாதித் தொகை ராணுவச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுவிட்டது.

ராணுவச் செலவுக்காகப் பணமே ஒதுக்கப்படக் கூடாது என்று நாம் கூறவில்லை.

நாட்டின் பாதுகாப்பு மிகவும் முக்கியம்.

அதற்காகப் பணம் செலவழிக்கப்படவேண்டியதும் நியாயம்; அவசியம்.

ஆனால் அதற்கும் ஓர் அளவு இல்லையா?

மொத்த வருவாயில் சரிபாதி ராணுவத்திற்கா?

இந்தியாவைப் போன்ற ஓர் ஏழை நாடு, தன் வருவாயில் சரிபாதியை ராணுவத்திற்கே செலவழித்துவிட்டால், கல்வி, சுகாதாரம், போன்ற இன்றியமையாத துறைகளுக்குப் பணம் எப்படிக் கிடைக்கும்?

ராணுவச் செலவுக்காகவென்று 198 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள இந்தப் பட்ஜெட், கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை 4 கோடி ரூபாய்தான்!

வெள்ளம் போன்ற தொகை, ராணுவத்திற்கு!

ஒரு சிறுதுளி, கல்விக்கு!

நியாயமா?

* * *

வாழ்க்கைக் கடலில் வறுமை எனும் சூறாவளி சுழன்று சுழன்று வீசுகிறது.

முதலாளித்வ திமிங்கிலம் ஒருபுறம் வாயைப் பிளந்தபடி ஓடிவருகிறது.

கள்ள மார்க்கெட் பருந்து வானைச் சுற்றி வட்டமிடுகிறது.

இல்லாமை இருள் எங்கும் கருநிறம் பாய்ச்சியபடி கோரக்காட்சி வழங்குகிறது.

தப்புவதற்கு வழி இல்லை. தத்தளிக்கிறான் ஏழை இந்தியன்,

உதவியோ உதவி என்று கதறுகிறான்.

காப்பாற்றுவார் யாருமில்லையா என்றுபரிதாபக்குரலில்கூவுகிறான்.

இதோ நான் இருக்கிறேன்—பயமேன் உனக்கு என்று கேட்டபடி முன்வருகிறது காங்கிரஸ் கப்பல்.

இந்தா, கரையேறு என்று கனிவுடன் கூறியபடி ஒரு படகையெடுத்து அவனிடம் வீசுகிறது காங்கிரஸ்.

ஆவலுடன் படகைப் பற்றுகிறான் ஏழை.

ஆனால் என்ன ஏமாற்றம்?!

படகு; ஓட்டை.

அதிலே ஏறிக்கொண்டால், அவன் கடலில் மூழ்கிச் சாகவேண்டியதுதான்.

செ! உதவியாம் உதவி! இதுவா உதவி! என்று சலிப்புடன் கூறி வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான் ஏழை.

மீண்டும் புயல்! பருந்து! திமிங்கிலம்! இருள்! பயங்கரம்! ஏழை மனிதனின் கதறல்!

உதவிசெய்வார் வேறு யாருமில்லையா என்று கதறுகிறான் அந்தப் பரிதாபத்திற்குரியவன்.

* * *

ஆசை காட்டி மோசம் செய்த அந்த ஓட்டைப் படகுதான் புதிய பட்ஜெட்!

## சென்னை மாவட்ட தி. மு. கழகம் சொற்பயிற்சி வகுப்பு

மே மாதம் 11-ந்தேதி துவக்கப்பட்ட பயிற்சி வகுப்பு தினசரி நடைபெற்று வருகிறது. 30-ந்தேதி வரை தோழர்கள், க. அன்பழகன், பா. வாணன், மா. இளஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத் கே. எ. மதியழகன், நாகர்கோயில் கே. மனோகரன் ஆகியோர் பல பொருள்களைப்பற்றி பயிற்சி தந்து வந்துள்ளனர். 30-ந் தேதியிலிருந்து ஜூன் மாதம் 4-ந் தேதிவரை தோழர்கள். இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், மு. கருணாநிதி, சத்தியவாணி முத்து ஆகியோர் பயிற்சி வகுப்புகளை நடத்த இசைந்துள்ளனர். இறுதியாகத் தேர்வு நடத்தி—வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்படும். ஒவ்வொரு நாளும் முப்பது மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

—எம். எஸ். முத்தையா
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரேஷ், அங்கு, அலங்கோலமாக, தரையில் கிடந்தான்! உடல் சில்லிட்டுப் போயிருந்தது! உறுப்புக்கள் அசையவில்லை—கல்லாகக் கிடந்தன அவை! இருதயத்துடிப்பு நின்றுவிட்டிருந்தது! ஆம்; பாரேஷ் செத்துக்கிடந்தான் அங்கே—பரமானந்தரின் கடிதம் அவன் அருகே காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது!

குமுறிக்கொண்டு வந்த துக்கத்தை கௌரியால் அடக்க முடியவில்லை! அவளுடைய கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த்துளிகள், பாரேஷின் முகத்தில் பட்டுத் தெறித்தன! விம்மித் தணிந்த மார்பின் உள்ளேயிருந்து—நெஞ்சின் ஆழத்திலிருந்து—கிளம்பிய பெருமூச்சு பயங்கரமாக எதிரொலித்தது!......

பாரேஷ், நீதிமன்றத்திலிருந்து வந்தவுடன், முதலில் கௌரியைத் தான் பார்ப்பான். அன்றும் அப்படித்தான் அவளைக் காண அவன் அறைக்குச் சென்றான், கௌரியைக் காணச்சென்ற அவனை, பரமானந்தரின் கடிதம்தான் வரவேற்றது; வரவேற்றது மட்டுமல்ல, அவன் நெஞ்சில், தாங்க முடியாத வேதனையை கிளப்பி விட்டது! அதன் விளைவு......ஒரு சொப்பை நஞ்சு, வேதனையில் வெந்துகொண்டிருந்த இதயத்துக்கு அமைதி தந்தது!......

எந்தக் கணவனைக் காணும் போதெல்லாம் கௌரின் உள்ளம் வெறுப்பால் நிறையுமோ—வேதனையால் துடிக்குமோ—அதே கணவனை, இன்று பிரேதமாக கண்ட போது, கௌரியின் இதயம், வெடித்து, சுக்கு நூறாகியது! அவளுடைய உள்ளக் கடற்கரையில் துக்கமும், பரிதாபமும் அலைமோதின! தற்கொலை செய்து கொண்டு சாகுமளவுக்கு தன்மேல் அன்பை கொட்டியிருந்தான் என்பதை நினைக்கும்போது......! வளால் தாங்கமுடியவில்லை!

கண்கள் கண்ணீரை சிந்தியபடியிருந்தன! உடல் ஆடிற்று, கொடி போல! அதைவிட அவள் உள்ளம் தான்...... ஆழ் கடலிலே, அந்தகாரத்திலே, புயல் வீசும் போது தத்தளிக்கும் படகைப்போல......!

நேரம் கரைந்து மறைந்துகொண்டிருந்தது!

அப்போதுதான்.........சாவின் மடியில் இன்பமனுபவித்துக் கொண்டிருந்த கணவன் அருகில் அமர்ந்திருந்த கௌரியை; அமைதியான இரவைக் கிழித்துக்கொண்டு கொல்லையிலிருந்து எழுந்த ஓசை, கொல்லைக்கு இழுத்தது!

சாரளத்தின் வழியாக எட்டிப் பார்த்தாள் கௌரி......

வினாடிக் கொருதரம், கொல்லைக் கதவை பார்த்துக் கொண்டே உலவிக் கொண்டிருந்தார் பரமானந்தர்! கன்னங்கருத்த இருட்டையே உள்ளமாகக் கொண்ட கள்வன், கன்னக்கோல் வைக்க பதுங்கிச் செல்வதைப் போலத்தான் இருந்தது அவரது அந்த செய்கையும்!

தான் ஒரு பயங்கரமான படுகுழியில் விழ இருப்பதை அப்போது தான் உணர்ந்து கொண்டாள் கௌரி! காவியுடைக்கும், கள்ளத்தனத்திற்கும் ஏதோ உறவு இருப்பதாகவே தென்பட்டது அவளுக்கு! இல் வாழ்க்கை கூடாது, அதில் கிடைக்கும் இன்பம் தகாது, என்று வெளியில் பேசுவது—உள்ளத்தில் கோமளமான நினைவுகளை நடமாடவிடுவது; துறவறத்தின்மேன்மையைப்பற்றி வெளியில் பேசுவது—இல்வாழ்விற்கு, உள்ளத்தில் திட்டம் தீட்டிடுவது; 'இப்படி இரட்டை வாழ்வு'' நடத்துவோரில் ஒருவர்தான் பரமானந்தர் என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டாள் கௌரி!

தன்னுடைய வாழ்விலே குறுக்கிட்டு, துளிர்க்க வேண்டிய வாழ்வை, வெட்டிச் சாய்த்த, அந்த உருவத்தை பார்க்க விரும்பாது, படபடக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்தபடியே, கணவனின் அறையை நோக்கிச் சென்றாள் கௌரி!

* * *

ஒலிகடல் நீலப்பெட்டி உடைத்தெழுந்தான் கதிரவன்! அவனது ஒளிக்கீற்றுகள், பாரேஷின் அறையினுள் புகுந்து, அங்கு தரையில் கிடந்த கௌரின் முகத்தில் பட்டுப் பிரகாசித்தன!

அவளுடைய முகத்தில் ஒரே அமைதி! செத்தவர் முகத்தில் காணப்படும் அமைதி! ஆம்; தற்கொலை செய்துகொண்டு இறந்தே போனாள் கௌரி! இல்லை! இல்லவே இல்லை! வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கொண்டவனை, தன்னுடைய வாழ்வில் ஏற்படும் சுக துக்கங்களை சேர்ந்து அனுபவிக்கவேண்டிய மனைவியை, புரிந்துகொள்ளும் வலிமையற்ற, சந்தேகத் தன்மையினால் உருவாக்கப்பட்ட, பாரேஷ்களும்—வாழ்வில் ஏற்பட்ட கொந்தளிப்பால் நிலை தடுமாறி அமைதியற்று அலையும் அபலைப் பெண்களை திருத்தாது, பரலோகத்துக்கு வழி காட்டுவதாகக் கூடி படுகுழியில் தள்ளும் பரமானந்தர்களும் நிறைந்த சமுதாயத்திலிருந்து—அதன் இரும்புப் பிடியிலிருந்து—தப்பிவிட்டாள்!

---


## நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள்

| | | |
|---|---|---|
| காதல் பாதையில் | 0 | 5 |
| அரசியல் குமரி (தங்கப்பழம்) | 0 | 3 |
| 144 | 0 | 8 |
| விஷக்கன்னிகை | 0 | 6 |
| சமுதாய பலிபீடம் | 0 | 3 |
| கடவுள் எங்கே | 0 | 3 |
| விதவையின் காதல் | 0 | 1 |
| இன்ப இரவு | 0 | 4 |
| என் கடன் களிப்பூட்டுதலே (என். எஸ். கே.) | 0 | 1½ |
| யார் இந்த மா. பொ. சி. | 0 | 4 |
| காதல் பரிசு | 1 | 4 |
| பூரிப்பு முத்தம் | 0 | 4 |
| எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம் | 0 | 8 |
| திராவிடம் | 0 | 3 |
| துரோகி கப்லான் | 0 | 4 |
| ரஸ்புடீன் (ஊடுருவி) | 0 | 8 |
| ஏ சதிகார சமுதாயமே | 0 | 3 |
| கோயில் பெருச்சாளிகள் வில்லாளன்) | 0 | 6 |
| இன்பத்தின் எல்லை | 1 | 0 |
| வேதனைக்குரல் | 0 | 4 |
| பிருந்தாவனத்தில் | 0 | 12 |
| கவி நீரோடை (செழியன்) | 0 | 6 |
| இன்ப இரவு (சேரன்) | 0 | 3 |
| கலைக்கோயிலா | 0 | 4 |
| கன்னியா விதவையா | 0 | 3 |
| அன்னை | 0 | 4 |
| இலட்சியவாதி அழகிரிசாமி | 0 | 5 |
| எல்லைக்கு அப்பால் | 0 | 8 |

பகுத்தறிவுப் பாசறை
131, பிராட்வே, சென்னை-1

# குடைபிடித்த கோமான்

[என். ஜகந்நாதன்]

புதியது எதையும் கண்டு உலகம் மருள்வது இயற்கை என்பது அறிஞர் கண்ட முடிவு. இந்த உண்மையைச் சாக்ரடீஸ் காலம் முதற்கொண்டு காந்தியடிகள் காலம் வரை கண்டு வந்துள்ளோம். "எதனையும் சிந்தனை செய்து, சீர்தூக்கிப் பார்த்து பிறகு ஒரு முடிவுக்கு வரவேண்டும்" என்று அறமொழி பகன்றார் சாக்ரடீஸ். 'சிந்தனை' என்ற சொல்லையே கேட்டிராத உலகம் அவர்மீது சீற்றங்கொண்டு, "சீசீ! முன்னோர் சென்ற வழியே நாமும் செல்வோம்; சிந்தனையாவது மண்ணாங்கட்டியாவது!' என்று கூறி அவருக்கு விஷங் கொடுத்துக் கொன்றது. யார் எந்தக் காலத்தில் புதியதாக ஏதாவது சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்ளாது, அவரை எதிர்த்து, ஏளனம் செய்து, இழிசொல் பகன்று, இலட்சியத்தைக் கிண்டல் செய்வது உலகத்தாரின் வழக்கமாகிவிட்டது. நாகரிகம் முற்றிராத அந்தக் காலத்தில் தான் அப்படி இருந்தது என்றால், விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ந்துவரும் இக்காலம் மட்டும் புதிய கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்கிறதா என்றால் அதுவும் இல்லை. நம்முடைய நாடுதான் இப்படி என்று எண்ணவேண்டாம். எல்லா நாடுகளுமே புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ள ஒரு காலத்தில் தயங்கித்தான் இருக்கின்றன என்பதற்குச் சரித்திரம் சாட்சி கூறுகிறது.

மழை பெய்கிறது; உடனே குடை பிடித்துக் கொள்கிறோம். மழை நம்மீது விழுவதினின்றும் ஓரளவுக்குத் தப்பித்துக்கொள்கிறோம். வெயில் சற்று அதிகமாகக் காய்கிறது. உடனே குடையை விரித்துக் கொள்கிறோம். கோரமான உஷ்ணத்தினின்று சிறிது தப்பித்துக்கொள்கிறோம். வெளியே செல்லும்போது குடையை எடுத்துக்கொண்டு செல்வது சிலருக்குப் பழக்கமாகிவிட்டது. பெண்களுக்கு அது ஒரு நாகரிகச் சின்னமாகிவிட்டது. இன்று குடை நம் வாழ்வில் சர்வசாதாரணமாகிவிட்டது; ஆனால் இருநூற்றாண்டுகளுக்கு முன் இருந்த நிலை என்ன?

ஒருவர் முதல்முதலாகக் குடை பிடித்தார். கோமான்களுக்கும்; கோலேந்திகளுக்கும் அவர் குடை பிடிக்கவில்லை தனக்குத்தானே பிடித்துக்கொண்டார். அதனால் தான் உலகம் கோபங்கொண்டு, குமுறி எழுந்து, அவரைக் கேலி செய்தது. கோமான்களுக்கும், கோமளவல்லிகளுக்குமே பிடிக்கப்படும் குடை ஒரு சாமான்ய மனிதனுக்குப் பிடிக்கப்படலாமா? ஆட்சியில் இருப்போர் மட்டுமே குடை பிடித்துக்கொள்வது வழக்கமாக இருந்த அந்தக் காலத்தில், இது போல் ஒரு சாதாரண மனிதன் தன்னை வெயிலிலிருந்தும், மழையிலிருந்தும் காப்பாற்றிக்கொள்ள, குடை பிடித்துக்கொண்டான் என்றால் அது ஆள்வோரை அவமானம் செய்வதற் கொப்பாகுமல்லவா? ஆகவே உலகம் அவரை எதிர்த்தது. அதுமட்டுமல்ல. குடை பிடித்துக்கொள்ளும் புதிய பழக்கத்தைக் கண்டுபிடித்தாரல்லவா? அது கண்டும் உலகம் மருண்டது. கருப்புத துணியாம், அதைச் சுற்றிக் கம்பிகளாம். அவைகளைச் சேர்த்து ஒரு கைப்பிடியாம். என்ன இது என்று எல்லோரும் வியந்தனர். வியந்ததோடு சும்மா இல்லை. குடைபிடித்துச் சென்றவரை வேதனைக் குள்ளாக்கினர். வீதியிலே குடைபிடித்துக்கொண்டு அவர் செல்லும்போது, அவர்மீது கற்களையும், முட்டைகளையும் வீசி, கடும் சொற்களால் ஏசி அவரை வேதனைக் குள்ளாக்கினர். சிறுவர்கள் முதல் பெரிய மனிதர்கள் வரை இந்தக் 'கைங்கரியத்தை'ச் செய்துவந்தார்கள்.

அந்த மனிதர் மனம் தளரவில்லை, மற்ற இலட்சியவாதிகளைப் போல். "இன்னும் சிலகாலம் கழித்து, எல்லோரும் குடைபிடித்துக்கொள்ளப் போகிறீர்கள்," என்று 'தீர்க்க தரிசன'த்தோடு கூறினர். இந்தச் சம்பவம் இங்கிலாந்தில் 1750-ம் ஆண்டில் நடந்தது. முதன் முதலில் குடைபிடித்துக்கொண்டு வீதியில் சென்று வேதனைபட்டவர் ஜோனஸ் ஹான்வே என்பவராவர்.

குடைபிடித்துக்கொண்டு செல்லும் வழக்கம் ஹான்வே எதிர்பார்த்தபடி அவ்வளவு சீக்கிரமாகப் பரவவில்லை. அவர் இறந்து முப்பதாண்டுகளுக்குப் பிறகுதான் குடையின் பயனை மக்கள் உணரலானார்கள். வெயில் காலத்திலும், மழைக்காலத்திலும் குடையினால் பயன் ஏற்படக்கூடும் என்று அறிந்தார்கள். கேம்பிரிட்ஜில் ஓரே ஒரு குடையை வைத்துக்கொண்டு வாடகைக்கு விட்டுவந்தார்களாம். நாளடைவில் இந்தப் பழக்கம் அதிகரிக்கலாயிற்று. பிறகு குடை உற்பத்தி பெருகியது. மக்களிற் பெரும்பாலோர் தங்களுக்காகச் சொந்தமாகக் குடை வாங்கி வைத்துக்கொள்ளலானார்கள். ஹான்வேயை அன்று இகழ்ந்தோரே என்று 'வழக்கம்போல' வருந்தினார்கள். அவரது சொற்கள் பலித்தன.

உலகில் எந்தக் காலத்திலும் அறிஞர்களைக் கேலிசெய்வதும், அவரது காலத்திற்குப் பிறகு, தங்கள் செய்கைகளுக்காக வருந்துவதும் வழக்கமாகிவிட்டது. அதே வழியில்தான் அறிஞர் ஹான்வேயும் சென்றிருக்கிறார். கேவலம் குடைபிடித்துக் கொள்ளும் வழக்கத்திற்கே இவ்வளவு எதிர்ப்பு இருந்தது என்றால், இதர கொள்கைகளுக்கு—அதிலும் புரட்சிகரமான கொள்கைகளுக்கு — எவ்வளவு எதிர்ப்பு இருக்கவேண்டும்?

முதலாளி உண்டுகளிக்க, தொழிலாளி துயரில் உழல்வதா என்று கேட்டார் கார்ல் மார்க்ஸ். உடனே, "முதலாளியும் தொழிலாளியும் ஒன்றாக முடியுமா? 'முதலாளி உழைக்காமல் உண்ணவேண்டும், தொழிலாளி உழைத்தும் பட்டினியாயிருக்கவேண்டும். இது அவரவர்கள் 'தலை எழுத்து' 'விதிப் பயன்'. அதை யார் எதிர்க்க?" என்று மார்க்ஸைக் கேலி செய்தார்கள்.

மக்கள் போக்குக்கு நாம் ஏன் ஆண்டவனின் பிரதிநிதி என்ற

பட்டம் தந்து அவருக்கு அடிமையாகவேண்டும் என்று மார்தட்டினார் மார்ட்டின் லூதர். அவர் மண்டையில் தட்டி, "உனக்கு இவ்வளவு மமதையா? ஆண்டவனின் பிரதிநிதியையா கேலி பண்ணுகிறாய்? உனக்கு நரகம்தான் சம்பவிக்கும்," என்றது அவர் கால உலகம். 'ஒவ்வொருவனுக்கும் சுயமரியாதை இருக்கவேண்டும். ஒருவன் சமூகத்தில் உயர்ந்தவன்; மற்றவன் தாழ்ந்தவன் என்ற பேதங்கள் இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட பேதங்கள் உள்ள சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும்,' என்று மமதையாளரின் ஆணவத்திற்குச் சவால் விடுத்தார் திராவிடத்தந்தை தியாகராயர். "என்ன! பிரமனின் முகத்தில் உதித்த முப்புரிநூலாரும், தொடையில் பிறந்தவர்களும் ஒன்றாக முடியுமா? அட, நாஸ்திகா! உனக்கு நரகம்தான்!" என்று நாக்கில் நரம்பில்லாமல் பிதற்றினார்கள்" விஷயம் தெரியாத பலவீனர்கள்—ஆனால் இந்த இலட்சியவாதிகள் எல்லாம் ஒரு காலத்தில் தங்கள் இலட்சியம் உலகில் எல்லோராலும் பின்பற்றப்படும் என்ற ஒரே நம்பிக்கையில்தான் தங்கள் கொள்கைகளை மக்களிடையே பலவித எதிர்ப்புகளிடையே பரப்பிவந்தார்கள். அதே வழியில்தான் சென்றார் அறிஞர் ஹான்வேயும்.

சாக்ரடீஸ் காலத்திலிருந்து, காந்தியடிகள் காலம்வரை இந்த உண்மையைக் கண்டுவந்திருக்கிறோம். புதியகொள்கைகளை உலகம் உடனே ஏற்றுக்கொள்வதில்லை. சிறிதுகாலம் கழித்து, அந்தக் கொள்கைகளைப் பலரும் ஆதரித்த பிறகுதான் இந்த உலகம் ஏற்றுக் கொண்டது. அது குடைபிடித்துக் கொள்ளும் பழக்கமானாலும் சரி, கோமான்கள் ஆட்சி ஒழிந்து குடிமக்கள் ஆட்சி நிலவ வேண்டும் என்ற கொள்கையானாலும் சரி, உலகம் சற்று மெதுவாகத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. உலகம் பலவிதமான குணங்களைக் கொண்ட மனிதர்கள் நிரம்பியது. ஆகவே எல்லோரும் உடனே புதிய கொள்கைகளை ஏற்றுக் கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. இந்த எண்ணத்தை நினைவில் வைத்துக்கொண்டுதான் இலட்சிய வாதிகள் தங்கள் கொள்கைகளைப் பரப்பவேண்டும். அப்போதுதான், அவர்கள் காலத்திற்குப் பிறகாவது உலகம் அவர்தம் புதுமைக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும். புரட்சிக் கருத்துக்களை உலகத்தார் அப்போதே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எந்த சீர்திருத்தவாதியும் எதிர் பார்க்கக் கூடாது. என்றாவது ஒருநாள் நம் கொள்கை இந்த உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தான் எதிர்பார்க்கவேண்டும்.

இந்த எண்ணத்தைக் கொண்டுதான் ஹான்வே அன்று குடைபிடித்துக்கொள்கிறார்கள். அதைப் போல்தான் கொள்கைகளுக்காகப் பாடுபடுபவர்கள் என்றாவது வரப்போகும் ஒரு நாளை எதிர்பார்த்துத் தான் பணியாற்றவேண்டும். சரித்திரம் இதைத்தான் கூறுகிறது. ஹான்வேயின் வாழ்க்கை அதற்குச் சாட்சியாக நிற்கிறது.

குடைபிடித்த அந்தக் கோமான் வாழ்க! இலட்சிய வாதிகளுக்கு உதாரணமான அந்த உத்தமர் நீடூழி வாழ்க! அவரது சரித்திரம் நமது பகுத்தறிவுத் தொண்டிற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கட்டும்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக: எங்க சாமி பண்றார்? அவர் மந்திரியாவறதுக்கு முன்னாலேயாவது இந்தப் பக்கம் வருவார், போவார்! இப்ப எங்க சாமி? அவர் தரிசனம் கிடைக்கிறதே அபூர்வமான்னு போச்சு? ஆமாம், உங்க பக்கத்திலே மழை எப்படி சாமி?

வரத: மழையா? திவ்யமா பொழிஞ்சுது! எதேஷ்டம்! ஏராளம்! எல்லாம் ராஜாஜி வந்த மகிமை ஓய் ராஜாஜி வந்த மகிமை. உங்க பேட்டையிலே ஓய்?

உலக: அங்கேயும் நல்ல மழைதான் மொத்தம் 18 அழியில்லா பேஞ்சிருக்காம். பிரார்த்தனை பண்ணுங்கோ மழை வரும்னு ராஜாஜி சொன்னப்போ கேலி பேசினாங்களே தி. மு. க. பசங்க, இப்ப என்ன சொல்வாங்க அவங்க?

வரத: என்ன சொல்வாங்க? மூணும் பேந்த மாதிரி முழிப்பாங்க! வேறென்ன சொல்வாங்க ஓய்? நம்ம ராஜாஜி பிரார்த்தனை பண்ணார்—மழை வந்தது. இல்லையானா மழை வருமா ஓய்? வருமாங்கறேன்! என்ன ஓய் பேசாம இருக்கீர்!

உலக: பேசறதுக்கு என்ன இருக்கு? நீங்க சொல்றது அவ்வளவும் வாஸ்தவம். என்ன இருந்தாலும் ராஜாஜின்னா ராஜாஜிதான்! கலிகாலத் தெய்வம் சாமி, அவர்! உத்தமமான பிராமணர். தேவாம்சம் பெற்றவர்!

வரத: நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழைன்னு சும்மாவா சொல்லியிருக்கா பெரியவா? ராஜாஜி தீர்க்காயுசா இருக்கணும்!

[என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பச்சையப்பன் கல்லூரி மாணவன் பரந்தாமன் கடைக்கு வருகிறான்.]

பரந்: செட்டியார்! துவரம் பருப்பு இருக்கிறதா? படி என்ன விலை.

உலக: வா தம்பி வா! உக்கார்! பருப்பு நிறைய இருக்கு! எவ்வளவு வேணும்?

பரந்: விலை என்னங்க? அதைச் சொல்லுங்க முதல்லே!

உலக: விலையைப் பத்தி என்ன தம்பி? உனக்கு என்ன அதிகமாவா சொல்லப் போறேன்! மத்தவங்களுக்குக் கொடுக்கிறதைவிட அரையணா குறைச்சே கொடுக்கிறேன். வாங்கிட்டுப் போ. (கந்தசாமியைப் பார்த்து) டே கந்தா! உள்ளே தனியா ஒஸ்தி பருப்பு இருக்கு. அதிலே ரெண்டு படி எடுத்துகிட்டு வா. (பரந்தாமனைப் பார்த்து) ஆமாம், நீ குறுக்குத் தெரு குமாரசாமி முதலியார் மகனில்லே?

பரந்: ஆமாம்

உலக: அந்தத் தெருவுலே பகுத்தறிவோ என்னமோன்னுட்டு ஒரு சங்கம் வச்சிருக்கியாமே, மெய்தானா அது?

பரந்: உண்மைதான் செட்டியார். அந்தத் தெருவில் உள்ள பகுத்தறிவு இளைஞர் மன்றத்தின் செயலாளர் நான்தான். விளக்கமாகவே சொல்லுகிறேன். எங்கள் பேட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பணியாளராக இருப்பவனும் நான்தான். ஏன்? என்ன தெரியவேண்டும்

(10-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. O. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)